# தொண்டன்

ஆரம்பம் - 1969




## 35வது ஆண்டு நிறைவு மலர்

பெப்ரவரி - ஏப்ரல் - 2004

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

பெப்ரவரி - ஏப்ரல்

மலர்-36 இதழ்-01

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
செல்லத்துரை ஜெயராஜா
பெஸ்லீயோ வாஸ்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/ மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் ~ 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை ~ 12/=
ஆண்டு சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு | - | 01 |
| தொண்டன் பத்திரிக்கையும்.... | - | 02 |
| உயிர்த்தார் இயேசு | - | 05 |
| இலங்கையில் வளர்ந்து வரும்.. | - | 07 |
| தொண்டனே வாழ்க! வருக! | - | 10 |
| இலக்கிய மஞ்சரி | - | 11 |
| பாவம் சமாதானக் குழந்தை | - | 12 |
| இருளில் ஒளி | - | 13 |
| முன்னேற்றத்திற்கு இருபது.... | - | 14 |
| நரேந்திரன் ஆசிரியருடன்..... | - | 15 |
| உளவியல் அணுகுமுறை..... | - | 17 |
| தொண்டன் பற்றி நால்வர் | - | 18 |
| பாலையூற்றில் கத்தோலிக்க... | - | 19 |
| இறப்பா? பிறப்பா? | - | 20 |
| மாணவர் பக்கம் | - | 22 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| பரிசுப்போட்டி | - | 24 |
| அர்ப்பண இரவிலே | - | 25 |
| உயிர்ப்பில் மலரும் புதுவாழ்வு | - | 27 |
| உயிர்த்தவருக்கு நாம் சாட்சி | - | 29 |
| சமாதானத்தீர்வின் எதிர்காலம் | - | 30 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

பிறக்கின்ற மனிதன்
பிறந்த கனத்தில் இருந்தே - தன்னோடு
பிறந்துவிட்ட
பிரேதக் குழியை நோக்கிய - தனது
பயணத்தையும் ஆரம்பித்து விடுகிறான்.

இறப்பு - இது
இறைவனின் திட்டத்தில் ஒரு பகுதி
இயற்கையின் நியதி
இறைமகன் இயேசுவும்
இதற்கு விதி விலக்கல்ல - அவர்
இறந்தார் - ஆனாலும்
உயிர்த்தார்.

உலக வரலாற்றில் - எத்தனையோ
உன்னத மகான்கள்,
உத்தம புருஷர்கள்
போதனையாளர்கள், சாதனையாளர்கள் - எனப்
பலர் வாழ்ந்தனர், சரித்திரமும் படைத்தனர்
இறுதியில் இறந்தும் போனார்கள்.
இறந்தபின் உயிர்ப்பேன் என்று
உரைத்தவர்கள் எவருமேயில்லை.
உயிர்க்கவும் துணியவில்லை - ஒருவரைத் தவிர

அவர்தான் இயேசு
இறப்பேன் என்றும் சொன்னார் - அதே வேளை
உயிர்ப்பேன் என்றும் சொன்னார்.
உயிர்த்தார் - இயேசுவின்

புத்தான் - நமது
சத்தை பொருளுள்ளதாக்குகிறது.
முள்ளதாக்குகிறது - எம் விசுவாசத்தின்
அடித்தளமுமாகிறது.
இயேசுவின் உயிர்ப்பு - அவர்
இறப்பின் மீது கொண்ட வெற்றி.
இயேசுவின் உயிர்ப்பு
நமது உயிர்ப்புக்கு - அவர் தந்த
உத்தரவாதம்.

இறப்புக்கு இனியும் - நாம்
இரங்கல் பா பாடலாமா - நாம்தான்
உயிர்ப்போமே.
இறப்பைக்கண்டு இனியும் - கதறத்தான்
வேண்டுமா - நாம் தான்
மீண்டும் சந்திப்போமே.
இறப்பு எமது முடிவல்ல
விடுதலை வாழ்வின் ஆரம்பம்
இறப்பை எண்ணி ஏங்காமல்
உயிர்ப்பும் உண்டு என உணர்ந்து
உயிர்ப்பின் முன் சுவையை
உயிர்த்த யேசுவோடு
இணைந்த வாழ்வின் மூலம் சுவைப்போம்.

இயேசு
சிறுமியை உயிர்ப்பித்தார்.
கைம் பெண்ணின் மகனை உயிர்ப்பித்தார்.
லாசரை உயிர்ப்பித்தார்.

உன்னையும், என்னையும் உயிர்ப்பிக்க இருக்கிறார்
எனவே உயிர்த்த இயேசுவில் உண்மையான
விசுவாசம் கொள்வோம்.

6ம் பக்கம் பார்க்க.

## இறைவாக்கு

கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.
மறை நூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்.
1கொரி. 15:3-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் பத்திரிகையும் சமூகத்தொடர்பு நிலையமும்

செல்லத்துரை ஜெயராஜா

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சி அறைகூவல் நமது மறைமாவட்டத்தில் 'தொண்டன்' பத்திரிகை ஆரம்பமாவதற்குக் கால்கோளாக அமைந்தது. இச்சங்கம், திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பும் உரிமைகளும், தொடர்புச் சாதனங்கள் வழியாக இறைதூதுப்பணி, சுயமொழி, சுயபண்பாட்டு வழிபாடுகள் போன்ற பல்வேறு விடயங்களை வலியுறுத்தியது. எனினும் நமது மறைமாவட்டத்தில் பத்திரிகை ஆரம்பிக்கப் படவேண்டும் என்பதில் அதீத அக்கறை கொண்டவர்களுள், அக்காலத்தில் எமது துணை ஆயராக விளங்கிய அமரர் அதிவண. தியோகுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடத்தகவர். இவர், சிறந்த கல்விமானும் இரண்டாம் வத்திகான் சங்க செயலமர்வுகளில் பங்கு பற்றியவரும் ஆவார்.

1968ம் ஆண்டு நடைபெற்ற திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம், (தற்போது திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் கழகம் என அழைக்கப்படுகிறது) அதன் 42வது வருடாந்த பொது அமர்வின்போது பத்திரிகை ஆரம்பிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இதை முன் மொழிந்தவர் முன்னாள் அதிபரான, அமரர் பொ. இராமலிங்கம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பேறாக 'தொண்டன்' பத்திரிகை உதயமாகியது. ஆரம்பத்தில் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை, மக்கள் வங்கி உத்தியோகத்தரும் தி. ம. மே. ஐ. சங்கத்தின் பொதுச்செயலாளரும், சமூகசேவையாளருமாகப் பணிபுரிந்த, அமரர் செ. அன்ரனிப்பிள்ளை ஏற்றுக்கொண்டார். நமது பிரதேச எழுத்தாளர்களின் பல்வேறு ஆக்கங்களுடனும் ஆறு பக்கங்களை உள்ளடக்கியதாகவும் பதினைந்து சதம் விலையுடனும் 1969ம் ஆண்டு, பெப்ருவரி மாதம் முதலாம் திகதி தொண்டன் பத்திரிகை முதன்முதலில் வெளியானது.. அந்தவகையில் தொண்டன் தனது முப்பத்தைந்தாவது அகவையை பெப்ரவரி மாதம் நிறைவு செய்கிறது என்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியும் பெருமையும் தருகிறது.

இவ்வாறு அன்று, பத்திரிகையின் ஆரம்பம் அமைந்திருந்த போதிலும் சில மாதங்களின் பின்னர் நிர்வாகச் சிக்கல்களும் நிதித்தேவைகளும் ஏற்பட்டபோது, பத்திரிகையின் பொறுப்புக்களைத் துணை ஆயர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். இதன்பிறகும் பத்திரிகை சீராக நடைபெற்றது என்பதைவிட பல சிரமங்களிடையே வெளிவந்துகொண்டிருந்தது என்பது தான் உண்மை. இதனால் பத்திரிகையின் பொறுப்பு மீண்டும் கைமாறப்பட்டு முன்னாள் குரு றெக்ஸ் ஜோசப் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், தொண்டன் விற்பனையில் ஏற்பட்ட பின்னடைவு அதன் தொடர் வெளியீட்டில் தாமதங்களையும், பிரசுரத்துக்காகப் பெருந்தொகையை மானியமாகச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தியது. இந்த நிலையில், 1980களில் தொண்டன் பத்திரிகையின் பொறுப்பு அருட்பணி அன்ரனி ஜோண் அழகரசனிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் தமது M.A.PhD அறிவாற்றலால் பத்திரிக்கையை மெருகூட்டிப் புதுத்தோற்றம் பெறச்செய்தார். நீளமான செய்திப் பத்திரிகையின் வடிவம் மாற்றப்பட்டு புத்தகமாக உருவானது. இக்காலப்பகுதியில் அதன் விலையும் படிப்படியாக உயர்ந்து ஒரு ரூபா ஆனது.

இங்கே நாம் இன்னுமொரு விடயத்தை அதாவது, சமூகத் தொடர்புகள் நிலையத்தைப் பற்றியும் குறிப்பிடவேண்டியுள்ளது. 2ம் வத்திகான் சங்க ஏட்டில், 'சமூகத்தொடர்புக் கருவிகள்' பற்றிய தனியானதொரு தொகுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் சமூகத் தொடர்பு அமைப்புகளைத் தோற்றுவித்து, இவைகளுக்கான தேசிய, மறைமாவட்ட நிலையங்களை அமைப்பதுபற்றி இயல்:2, எண் 19, 20, 21, 22, ஆகிய பகுதிகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களை இலகுவாகச் சென்றடையக்கூடிய வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் நற்செய்திப் பணிக்குப் பொருத்தமானவை என்பதையும் மாறிவரும் உலகுக்கு அது தேவை என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொண்டது திருச்சபை. இதனால் வானொலி(UNDA) திரைப்படம் (OCIC) பத்திரிகை (UCIP) போன்ற துறைகளுக்கான அனைத்துலக அமைப்புகள் நிறுவப்பட்டன. உலகமெங்கும் இதன் கிளைகளும் பரந்து சென்றன, ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் தொடர்புத் துறைக்கான முயற்சிகள் உருவாக்கப்பட்டன. நமது மறைமாவட்டத்திலும் 'சமூகத்தொடர்பு நிலையம்' என்னும் பெயருடன் ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது இயக்குனராக அதாவது அன்றைய மொழியில் பொறுப்பாளராக அமரர் அருட்பணி நோபட் A.ஒக்கஸ் அடிகளாரை 1971. 11. 01 ம் திகதி எமது அன்றைய ஆயர் அமரர் அதிவண இக் னேஷியஸ் கிளெனி அவர்கள் நியமனம் செய்து வைத்தார்.

ஆனாலும் இந்நிலையத்தோடு தொடர்பு கொண்டவர் மிகச் சிலரேதான். அக்காலத்தில் இன்றிருப்பது போல வளங்களும் வசதிகளும் இல்லை என்பதை விட, நமது மறைமாவட்டக் கத்தோலிக்க சமூகம் 2ம் வத்திக்கான் சங்க மறுமலர்ச்சியை முழுமையாக அறிந்திருக்கவில்லை. அதை மக்களுக்கு அறிவிக்கும் அடிப்படைப் பணியை ஆரம்பித்தவர். அமரர் அருட்பணி நோபட் அடிகள் என்பதே உண்மை. வழிபாடுகள் தமிழில் ஆரம்பமானபோது மக்கள் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அவற்றை அறிவித்தார். திருவழிபாட்டுப் பாடல்களை மக்களுக்குப் பழக்குவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இசைப் பிரியரான இவர் பங்குகள் தோறும் பயணம் செய்து, மக்களுக்குப் பாடற் பயிற்சிகளை வழங்கினார். இதற்கு ஏற்ற குரல் வளம், இறைவன் அவருக்கு அளித்த அருள் வரமாயிற்று. அதன்மூலம் அர்த்தமுள்ள பல பிரசங்கங்களையும் ஆற்றிவந்தார். கலைத்துறை ஈடுபாடுடைய இவர் பல சமூக நாடகங்களை பங்குகள் தோறுமுள்ள இளைஞர், யுவதிகளை நடிக்கச் செய்து வெற்றிகண்டுள்ளார். அதுவரை காலமும் சொரூபங்களைக் கொண்டே காண்பிக்கப்பட்டு வந்த பாஸ்கா நாடகங்களை நவீனமயமாக்கி, உண்மையான மனிதர்களை நடிக்கச்செய்து, பிரமிக்கவைக்கும் நுட்பங்களால் மக்களை வியப்பிலாழ்த்தியவர் இவர். நமது மறைமாவட்டத்தில் கலைத்துறை, பத்திரிகைத் துறை,தொடர்பாடல் போன்றவற்றில் ஒரு திருப்பு முனையாக அடிகளாரின் தொடர்புத்துறை பொறுப்பாளர் பதவி அமைந்திருந்தது. இங்கிருந்தும் பல வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன, இதுவரை காலமும் இவ்வனுபவங்களைக் கொழும்பிலுள்ளவர்கள் மட்டுமே பெற்று வந்தனர். அடிகளாரின் நியமனத்தின் பின் இவ்வாய்ப்பு நமக்கும் கிட்டியது. இதன் மூலம் நோபட் அடிகள் பல கலைஞர்களை ஒனிறினைத்து, பிரதி தயாரித்து, பயிற்சியளித்து கொழும்புக்குக் கூட்டிச் சென்று பல வானொலிக் கலைஞர்களை உருவாக்கிவிட்டார். அதேபோல வானொலிக் கருத்தரங்குகளையும் பயிற்சி முகாம்களையும் நடாத்தி அவர்களை வளர்தெடுத்த பெருமையும் அடிகளாரையே சாரும்.

1980ம் ஆண்டு தொடர்புத்துறை பொறுப்பாளராக அருட்பணி தியோபிலஸ் றாகல் நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியில்தான் நம்நாட்டில் தொலைக்காட்சி அறிமுகமானது. இதனால் நமது கலைஞர்களைக்கொண்டே ‘கருங்கல் கசிந்தது’ என்னும் வீடியோ நாடகத்தைத் தயாரித்து ஊக்கப்படுத்தினார். இதுவே நமது மறைமாவட்டத்தின் தொலைக்காட்சித் துறையில் முன்னோடி முயற்சியாகும்

அது அவ்வாறிருக்க 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனவன்முறைகளால் முழுநாடுமே பேரழிவு கண்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளானார்கள், உயிரிழப்பும் பொருளிழப்பும் சொல்லுந்தரமன்று. குறிப்பாக சிங்களவர் மத்தியில் வாழ்ந்த தமிழர்களுக்கே அத்தனை அழிவுகளும் அகதி நிலையும் உண்டாயிற்று. ஆனாலும் நமது மறைமாவட்டத்தைப் பொறுத்தளவில் சில மாற்றங்களையும் நன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த நன்மையைக் கூறுமுன் அதன் தொடர்பான ஒரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டியுள்ளது. 1975ம ஆண்டுமுதல் கத்தோலிக்க தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் புதிய உலகம் எனும் பெயரில் ஒலிபரப்பப்பட்டுக்கொண்டிருந்தன. இந்நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிக்கொண்டிருந்தவர் அருட்பணி S.M செல்வரெட்ணம் அவர்கள், இவர் பச்சையப்பன் கல்லூரியில் பட்டம் பெற்றவர். கொழும்பு மறைமாவட்டத்திலிருந்து கொண்டு, ஏனைய மறைமாவட்ட நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தார். இவர் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற பின்னர் 1979ம் ஆண்டில் திரு மலர்வேந்தன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதுவரை கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்த இவருக்கு நல்ல குரல் வளமும் அழுத்தமான மொழி உச்சரிப்பும் இயல்பாகவே அமைந்திருந்தன. அவ்வாறு பொறுப்பேற்றுப் பணியாற்றிக்கொண்டிருந்த வேளையிற்தான் இந்த இனக் கலவரம் வெடித்தது. இதனால் திரு. மலர்வேந்தன் தமது சொந்த ஊரான மட்டக்களப்புக்கு வந்து, தற்காலிகமாக ஆயர் இல்லத்தில் தங்கிப் பணியை மேற்கொண்டார்.

அதே ஆண்டு அதுவரை ஆயராக இருந்த அதிவண L.R அன்ரனி அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, ஆயர் ஜோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதேவேளை தொடர்புத்துறையில் முதுகலை ( M.A) பட்டம் பெற்ற அருட்பணி C. P ராஜேந்திரம், யேசு சபைக் குருவானவர் சமூகத் தொடர்பு நிலைய இயக்குனராக நியமனம் பெற்றார். இதன் பிறகுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத் தொடர்பு நிலையம் தனி அமைப்பாக உருவாகி, அதற்கான கலையகமும் 1983.12.05 ந்திகதி நிறுவப் பட்டது. அத்தோடு இதுவரை கொழும்பிலிருந்து திரு மலர்வேந்தன் ஆற்றிவந்த வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பை எமது மறைமாவட்ட சமூகத் தொடர்புகள் நிலையம் பொறுப்பேற்றுக்கொண்டது. அதுமட்டு மல்லாது, 1983ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தொண்டன் பத்திரிகையையும் பொறுப்பேற்று வெளியிடத் தொடங்கியது. தவிர தொடர்புத்துறை இயக்குனர் பகுதி நேரமில்லாது, முழுநேரப் பணியாளராகச் செயல்படத் தொடங்கினார். இவரே தொண்டன் ஆசிரியராகவும் சேவை செய்ய வேண்டும் என்ற நியதியும் ஏற்பட்டது. இதன்படி அருட்பணி C. P இராஜேந்திரம் தொண்டன் பத்திரிகையின் தரத்தை உயர்த்தவும், விற்பனையை மேலோங்கச் செய்யவும் பல முயற்சிகளை மேற் கொண்டார். பத்திரிகைக்கென ஓர் ஆசிரியர் குழுவை ஏற்படுத்தியதோடு, இணை ஆசிரியர் ஒருவரையும் நியமித்தமை சிறந்த செயலாகவே கருதப்பட்டது.

இதன்பேறாக தொண்டனுக்குக் கிடைத்த இணை ஆசிரியர்தான் திரு. மலர்வேந்தன் அவர்கள் சமூகத் தொடர்பு நிலையத்தின் பொறுப்பாளராகவும் பணியாற்றிய இவர், பல்வேறு வானொலி நிகழ்ச்சி களைத் நமது மறைமாவட்டக் கலைஞர்களைக் கொண்டு தயாரித்து வானொலிக்கு வழங்கிக் கொண்டி ருக்கிறார். இது நமது கலைஞர்களுக்கு உற்சாகமளிப்ப தோடு பல வானொலிக் கலைஞர்கள் உருவாக வழியும் வகுத்தது. தவிர பல்வேறு மறைமாவட்ட நிகழ்ச்சி களையும் தயாரித்து வழங்கி, புதிய உலகம் நவீன வடிவம் பெற்று உயிர்த்துள்ளது. 2004ம் ஆண்டு திரு மலர்வேந்தன் தமது வானொலி நிகழ்ச்சித் தயாரிப் பாளர் பணியில் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொண்டன் ஆசிரியராகவும் சமூகத் தொடர் புகள் நிலையத்தின் இயக்குனராகவும் பணியாற்றிய அருட்பணி C. P இராஜேந்திரத்தைத் தொடர்ந்து அருட்பணி. P ஜோசப், அருட்பணி. கிங்ஸிலி றொபட், அருட்பணி A.தேவதாசன் ஆகியோர் பணிபுரிந்த பின்னர் தற்போது அருட்பணி J.A.G றெட்ணகுமார் அப்பதவியை வகிக்கிறார். இவர்கள் ஒவ்வொருவரும் தொண்டன் பத்திரிகை, புதிய உலகம் வானொலி நிகழ்ச்சிகளையும் சமூகத் தொடர்புகள் நிலையத் தையும் மேம்பாடடைய அரும் பணியாற்றியுள் ளார்கள். 1994ம் ஆண்டு முதல் சமூகத் தொடர்புகள் நிலையத்துக்கு ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழு பத்திரிகை, வானொலி, சம்பந்தமாக சிறந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. இதன் பேறாக தொடர்பு தின விழா வருடந்தோறும் சிறப்பிக் கப்படுகிறது. கத்தோலிக்கக் கலைஞர்கள் பலர் கௌர விக்கப்பட்டுள்ளனர். மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மூன்று மறைக் கோட்டங்களிலும் தொண்டன் எழுச்சி விழா நடாத்தப்பட்டது. மேலும் தொண்டன் பத்திரிகை, வானொலி நிகழ்ச்சிகளுக்கு இக்குழுவின் அங்கத்த வர்கள் ஆக்கங்களைப் படைத்துவருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இம்மாதம் தொண்டன் தனது முப்பத்தை ந்தாவது அகவையை நிறைவு செய்கிறது என்பதை நாம் பெருமையோடு நினைவு கூர்ந்தபோதிலும், பத்திரிகை வெளியிடுவதிலுள்ள சிரமங்களை நாம் மறந்துவிடமுடியாது. அதிலும், தனியொரு சமய நிறுவனத்தின் குரலாக ஒலிக்கும் இப்பத்திரிகை, விளம்பரங்களோ, வேறெந்த வருமானமோ இன்றி கத்தோலிக்கத்தின் கருத்துக்களை மட்டுமே தாங்கி, நம்மத்தியில் வெளிவந்து கொண்டிருப்பது இறை வனின் வழிநடத்தல்தான். எமது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தொண்டனுக்குத் தெரிவிக்கும் அதேவேளை, அதை ஆதரித்து உயிர்த்திருக்கச் செய்யும் கடமையையும் உணர்வோமாக.

## இளவாலை அமுதுவிற்கு செவாலியர் விருது

யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்த புலவர் அமுது அவர்களுக்கு திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்கள் 'செவாலியர்' பட்டமும் விருதும் வழங்கி கௌரவித்துள்ளார். அவர் தமிழ் மொழிக்கும் இலக்கி யத்துக்கும், சமூகத்துக்கும் சமயத்துக்கும் ஆற்றிய பெரும் பணிக்காக இப் பட்டமும் விருதும் வழங்கப்பட்டுள்ளது. திருச் சபையின் வரலாற்றில் தமிழ்ப்புலவர் ஒருவருக்கே முதன்முதலாக இப்பட்டம் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது தமிழ் மக்கள் அனை வருக்கும் மகிழ்ச்சியும் பெருமையும் தருவதாகும். திருச்சபை அளிக்கும் இவ்வுயர் பட்டம் சமயத் துக்கும், சமூகத்துக்கும் பெரும்பணியாற்றியவர் களுக்கு அரிதாகவே வழங்கப் படுகின்றது. தற்போது இலண்டன் மாநகரில் வசிக்கும் இளவாலை அமுது அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தின் கிறிஸ்தவ பீட முன்னாள் தலைவரான கலாநிதி அருட்திரு சந்திரகாந்தன் அவர்களின் தந்தை யாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தார் இயேசு



வெள்ளியன்று பிற்பகலில் மரித்த இயேசு
வேதமுற மாலையிலே அடக்க மானார்
கள்ளர்களும் ஓய்வெடுப்பார் சனியில் அன்று
கட்டாய விடுமுறைநாள் யூத ருக்கு
பிள்ளைகளும் பெரியோரும் மாதர் தாமும்
பேதலித்துச் சனிமுழுதும் ஓய்ந்திருந்தார்
வெள்ளிமுளைத் தேளழுந்து ஞாயி றன்று
விடிகின்ற போதினிலே குறித்தெ ழுந்தார்

அந்நேரம் கல்லறையைக் காவல் காத்த
ஆயுதம் சேர் பெருவீரர் பூமியின் மேல்
மின்னலுடன் இடிவந்தே மோதிற் றேபோல்
மிகப்பெரிய பூகம்பம் நிகழக் கண்டார்.
பொன்னிறத்தில் ஒருதூதன் வானை விட்டுப்
பூமிக்கு வருவதனை அவர்கள் பார்த்தார்
அன்னவரும் கல்லறையின் கல்லை நீக்கி
அதன்மீது அவன் அமரு வதையும் கண்டார்.

தூதனவன் திருவுருவம் மின்னல் போலும்
தொட்டெடுத்த உடைவெள்ளைப் பனியைப் போலும்
நாதவடி வாக அவன் நிற்கக் கண்டு
நடையிழந்து படைவீரர் மயங்கி வீழ்ந்தார்
மாதர்களும் வைகறையில் கல்ல றைக்கு
வாசமிகும் பொருளோடும் வந்து சேர்ந்தார்
பாறைக்கல் விலகியதும் தேவ தூதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் இருப்பதுவும் திகைத்தே பார்த்தார்
ஆண்டவரின் திருத்தூதன் அவரைப் பார்த்து
" அறையுண்டு மடிந்தவரைப் பார்க்க வந்தீர்
ஆண்டவரின் உடல் இல்லை உரைத்த வாறே
இயேசுபிரான் உயிர்த்தெழுந்தார் இங்கே நீங்கள்
வேண்டுமெனில் சடலத்தை வைத்த அந்த
வியத்தகுந்த கல்லறையைப் பார்த்துச் செல்வீர்
காண்டகைய செய்திதன்னைக் கண்ட பின்பு
கட்டாயம் சீடரிடம் போய்ச் சொல்லுங் கள்"

எனக் கூறி திருத்தூதன் முடித்தான் வந்த
எல்லோரும் கைப்பொருளைக் கீழே போட்டு
மனக்குமுறல் கொண்டுள்ள சீடருக்கு
மகத்தான சேதி சொல்லப்புறப்பட் டார்கள்!
தனைக் கண்டு யார் பேசினாலும் கூட
தாம் தண்ட காட்சியினை மறைத்த வாறு
சனக்கூட்டம் சீடரையே தேடிச் செல்லும்
தலைவனவன் உயிர்த்தகதை சொல்வ தற்கு



இயேசு காவியம்

இன்னும் இறவாமல் உயிர்ப்புடன் இருக்கும்
இன்னுமொன்றில் மகிழ்ச்சி அடைகிறேன் - அதுதான்
நமது தொண்டன் சஞ்சிகை.
தொண்டன் தனது 35வது வயதைக் கடந்து தொடர்ந்து
தொண்டாற்ற தனது 36வது வயதில்
காலடி எடுத்து வைத்துள்ளான்.
தொண்டாற்ற வந்த தொண்டனை
தொண்டர்கள் நீங்கள் தொடர்ந்து
வரவேற்றதினால் வாழ்த்துகிறேன்.
தொண்டனை மட்டுமல்ல உங்களையுந்தான்.
தொடர்ந்தும் தொண்டன் பல்லாண்டு வாழ
வாழ்த்துப்பாட உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

**Easter நல்வாழ்த்துக்கள்.**

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வளர்ந்து வரும் மத அடிப்படை வாதம்

மலர்வேந்தன்

இலங்கையில் கட்டாய மதமாற்றுத் தடைச் சட்டம் கொண்டு வரப்படவேண்டும். என்ற கூக்குரல்கள் அண்மைக்காலத்தில் பல மட்டங்களிலிருந்தும் ஆக்ரோஷத்துடன் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வெறும் கோஷமாகமட்டுமல்லாது, ஆர்ப்பாட்டமாக, ஊர்வலமாக, கிறீஸ்தவ ஆலயங்களை உடைக்கின்ற வன்செயலாக வளர்ந்து கொண்டிருக்கின்றமை மிகவும் கவலை தருவது மட்டுமன்று சிறுபான்மை மதங்கள் மீது எடுக்கப்படும் அத்துமீறிய நடவடிக்கையாகவும் உள்ளது. இது தொடர்பாக கிறீஸ்தவ மதங்கள் மீதும் சில வெளிநாட்டு நிறுவனங்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

- கிறீஸ்தவர்கள் உதவி என்றும் அற்புதங்கள் என்றும் மக்களை ஏமாற்றி, கட்டாயப்படுத்தி மதம் மாற்றுகிறார்கள்.
- எமது பாரம்பரிய மதங்களையும் கலாசாரங்களையும் அழிக்கிறார்கள்.
- கிறீஸ்தவர்களின் ஒத்துழைப்போடு இந்நாட்டைப் பிரிப்பதற்கு வெளிநாட்டுச் சக்திகள் முயற்சிக்கின்றன.
- கிறீஸ்தவர்களின் ஆயுதப் பிரிவுதான் விடுதலைப்புலிகள்

இவ்வாறு உண்மைக்குப் புறம்பான விதத்தில் வாயில் வந்தபடி பேசப்படுவதோடு,

இது பௌத்த நாடு, இங்கிருப்பது பௌத்த கலாசாரம், இங்கு புத்தபிக்கு ஒருவரே ஜனாதிபதியாக வரவேண்டும் என்று இந்நாட்டின் பல்லின பல்மதத்தன்மையைப் புறக்கணித்து மத அடிப்படைவாத அரசியல் ஒரு வெறித்தனத்தோடு தன்னை நிலை நிறுத்த முயல்வதைக் காணலாம்.

மதமுரண்பாடுகள், மதமோதல்கள் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. உலகின் பல பாகங்களிலும் காலத்துக்குக்காலம் இவை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இலங்கையிலும் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் தீவிர மடைந்திருந்த மத முரண்பாடுகள் இலங்கை சுதந்திரமடைந்த பின் சிறிது தணிந்திருந்தது; இல்லை, அதன்பின் விஷ்வரூபமெடுத்த இன முரண்பாட்டுக்குள் ஒளிந்து இனவாத அரசியலுக்குள் செல்வாக்குச் செலுத்தியது. தற்போது இனமுரண்பாடுகள் ஒரு திட்டமிட்ட வழிமுறையில் தீர்க்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட வேளையில் மத அடிப்படைவாதம் தன் பொய் முகத்தைக் கலைத்துக் கொண்டு வெளிக்கிளம்பியுள்ளது.

மத நம்பிக்கை, தெய்வ பக்தி என்பது மனம் சார்ந்த விடயம் ஒருவரது தனிப்பட்ட உரிமை. இதனைக் கட்டாயத்தினாலோ, சட்டத்தினாலோ உருவாக்கிவிட முடியாது. ஒருவர் மதம் மாறுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். புறநடவடிக்கைகளால் மத மாற்றத்துக்கான ஒரு தூண்டலை ஏற்படுத்த முடியுமே அன்றி கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்வது என்பது வெறும் பிதற்றல். உண்மையில் இந்தக் கட்டாய மதமாற்றம் என்ற கோஷத்துக்குப் பின்னால் இருப்பது ஒருவித பயம், பொறாமை, மத அடிப்படைவாத அரசியல் என்பவையே.

## பயம்

மதமாற்றம் தொடர்பான பயத்துக்கு ஒரு வரலாறு இருக்கிறது. 400 ஆண்டுகால காலணித்துவ ஆட்சியிலே சிங்கள, தமிழ், மக்கள் மத்தியிலே மத மாற்றத்துக்கான சில நிர்ப்பந்தங்கள் இருந்தன. காலணித்துவ ஆட்சிக் காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட நவீன கல்வி, தொழில் வாய்ப்புகள், சமூக அரசியல் அந்தஸ்து போன்றவைகளைப் பெற்றுக் கொள்ள சுதேசிகள் பலரும் மதம் மாறினர். அதேவேளை பிற மதங்கள் தொடர்பாக கிறீஸ்தவத் திருச்சபைகள் கொண்டிருந்த கடுமையான நிலைப்பாடுகள் மதமுரண்பாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பாகவும் இருந்தது. மேலும் இதற்குப் பின்னால் ஓர் அரசியலும் இருந்தது. காலணித்துவ ஆட்சியாளர்கள் கிறீஸ்தவர்களாக இருந்ததால் மதரீதியாகத் தங்களுக்கு இசைவான ஒரு கூட்டத்தை இங்கே உருவாக்கினால் தம் ஆட்சிக்கு எதிராக எழும் சுதேச எதிர்ப்புக்களைச் சமாளித்து தம் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வது சுலபம் என்று அவர்கள் கருதினர். ஆகவே, மிஷனறிகளின் மதமாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளுக்கு அரசின் ஒத்துழைப்பும் அனுசரணையும் இருந்தது. ஆயினும் இதற்கு எதிர்ப்பும் எழாமல் இல்லை. ஆறுமுக நாவலர் போன்ற தமிழ் மதத் தலைவர்களும் அநாகரிக தர்மபால போன்ற சிங்கள மதத்தலைவர்களும் மதமாற்ற முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு அதனைத் தடுக்கும் வகையில் தீவிர செயற்பாடுகளிலும் இறங்கி இருந்தனர். வடபகுதியில் ஆறுமுக நாவலருக்கும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருக்கும் இடையே பத்திரிகை வாயிலாகவும், பிரசுரங்கள் வாயிலாகவும் நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்கள் புகழ்பெற்றவை. இதன் காரணமாக எழுந்த முரண்பாடுகள் இலங்கை சுதந்திரம் அடைந்த பின் ஓரளவு அடங்கினாலும் அவை ஆறிப் போக வில்லை. கிறீஸ்தவர்கள் தம் மதத்தை, அழிப்பவர்கள், தம் கலாசாரத்தை மாற்றுபவர்கள், அவர்கள் அந்நிய மதவாதிகள் என்ற அச்சம் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. கிறீஸ்தவ - குறிப்பாகக் கத்தோலிக்க திருச்சபையின் பிறமதங்கள் பற்றிய தற்போதைய பார்வையை, 2ம் வத்திக்கான் சங்கத்துக்குப் பின் ஏற்பட்ட விழிப்புணர்வை, பிற மதங்கள் பால் திருச்சபை கொண்டுள்ள ஆழ்ந்த மதிப்பை, மரியாதையை நேசத்தை பிறமதத்தினர் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல அது பிற மதத்தினர் மத்தியில் சரியான விதத்தில் எடுத்துச் செல்லப் படவும் இல்லை என்பது துரதிர்ஷ்ட வசமானது.

### ❖ பொறாமை

"கிறீஸ்தவ மதங்களுக்கு ஒரு சர்வதேசத்தளம் இருக்கிறது. அவர்களுக்கு அனைவரும் ஏற்றுக் கொண்ட செல்வாக்கு மிக்க ஒரு தலைமைத்துவம் உள்ளது. அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி உட்பட பல்வகைப்பட்ட உதவிகளும் கிடைக்கின்றன. அவர்கள் வலிமையான ஒரு நிறுவனமாக உள்ளனர். பல்வேறு சமய சமூக அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துகின்றனர். அவர்களுக்கு அனைத்து மட்டத்திலும் செல்வாக்கும், மரியாதையும் உள்ளது. இந்த வசதி வாய்ப்புகளோடு அவர்கள் சுலபமாக மதமாற்றத்தில் ஈடுபடுகின்றனர்." இயலாமையிலிருந்து எழும் இதுபோன்ற எண்ணப்பதிவுகளால் ஏற்படும் எரிச்சல், பொறாமை போன்றவையும் இந்தக் கட்டாய மதமாற்ற கோஷத்துக்குப் பின்னாலுள்ள ஒரு காரண மாகும்.

### ❖ மதஅடிப்படைவாத அரசியல்

மத அடிப்படைவாதம் எப்போதும் அரசியல் சக்திகளின் துணையோடு தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முயல்வது உலகெங்கும் காணப்படும் ஒரு பொதுத்தன்மையாகும். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகள், மற்றும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இந்தப்போக்கை அவதானிக்க முடிகிறது. இலங்கை அரசியலில் பௌத்த அடிப்படைவாதம் முழு மூச்சோடு தன்னை இறுகப் பிணைத்துக் கொண்டுள்ளது. இலங்கை அரசியல் திட்டத்தில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம். இலங்கை அரசின் கொள்ளைத் திட்டமிடலை நெறிப் படுத்தும் அமுக்கச் சக்தியாக பௌத்தம் உள்ளது. பௌத்த மதவாதிகளின் உதவியின்றி இலங்கையில் எவரும் அரசமைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. அரச பதவிகளுக்காக மதம் மாறிய தலைவர்கள் பலரை இலங்கை அரசியலில் நாம் காணலாம். பௌத்த அடிப்படைவாதம் பேரினவாத அரசியலோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும், இங்கிருப்பது பௌத்த கலாச்சாரமென்றும் கூறிக்கொண்டு சிறுபான்மை இனங்களுக்கும், மதங்களுக்கும் அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது. இந்த பௌத்த அடிப்படை வாதிகள், பேரினவாத நலன்களுக்கே முதன்மை கொடுத்து சிறுபான்மை இனத்தினது உரிமைகளை மறுத்தே வந்துள்ளனர். பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா போன்றவர்களது காலத்தில் சிறுபான்மை மக்களது பிரச்சினைகளை ஏதோ ஒரு வகையில் தீர்த்துவைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி ஒப்பந்தங்களைக் கிழித்தெறியச் செய்தவர்கள் இந்த பௌத்த அடிப்படைவாதிகளே. இதன் காரணமாகவே புத்தபிக்கு ஒருவரால் பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டார். இன்றும் சிறுபான்மை மக்களது பிரச்சினைக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஒரு தீர்வினைக்காண முயற்சித்துக் கொண்டிருந்த வேளையில் பௌத்த அடிப் படைவாதம் பேரினவாத அரசியல் சக்திகளோடு கை கோர்த்துக்கொண்டு சமயரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் கலவரங்களை உருவாக்கி சமாதான முயற்சிகளை நிலைகுலையச் செய்துள்ளது. கிறீஸ்தவர்கள் கட்டாய மதமாற்றம் செய்கிறார்கள் என்று ஆரம்பித்தவர்கள். கிறீஸ்தவர்கள் நாட்டைப் பிரிக்கத் துணை போகிறார்கள் என்றும் கிறீஸ்தவர்களின் ஆயுதப்பிரிவே விடுதலைப் புலிகள் என்றும் இந்த நாட்டுக்கு புத்தபிக்கு ஒருவரே ஜனாதிபதியாக வர வேண்டும் என்றும் கூறுவதிலிருந்து அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள பேரினவாத பௌத்த அடிப்படை வாதத்தின் சரியான பரிமாணத்தை நாம் விளங்கிக் கொள்ள முடியும். இவர்கள் தங்கள் வேஷத்தை மூடி மறைக்க சிறுபான்மை இனங்களைப் பிரித்தாளவும் முயற்சி எடுத்து வருகின்றனர். இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்களையும் இந்துக் கோயில்களையும் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் உடைத்தெறிந்து அட்டகாசம் புரிந்த இவர்கள் இன்று இஸ்லாமியருக்காகக் கண்ணீர் வடிப்பதும், மதமாற்றம் என்ற பெயரால் இந்துச் சகோதரர்களுக்கு தம்மோடு இணைய அழைப்பு விடுப்பதும் பச்சோந்தித் தனமாகும்.

மதம் என்பது கடவுள் எனும் அன்புச் சக்தியோடு இயற்கை உட்பட மனிதகுலம் அனைத்தையும் அன்பில் ஒனிறினைக்கும் ஆன்மநலக் கொள்கையை விளக்கி வழிகாட்டும் அமைப்பாகும். இந்த அன்பு வாழ்வையே கிறீஸ்தவம் உட்பட அனைத்து மதங்களும் போதிக்கின்றன. ஆனால் ஆன்ம நலனை, அன்புறவைத் தொலைத்துவிட்டு அமைப்புக் களுக்காக சண்டை பிடிக்கும் வெறித்தனமே வரலாற்றில் மேலோங்கி உள்ளது. அது சிலுவைப் போராக இருந்தாலென்ன, இஸ்லாமியர்களின் 'ஜிகாத்' ஆக இருந்தால் என்ன, பல்லவர்கால வைதீக சமய எழுச்சியாக இருந்தாலென்ன, இன்றுவரை சமயங்களின் பெயரால் ஆங்காங்கே நடந்துவரும் போராட்டங்களும் அழிவுகளும் மதங்கள் வலியுறுத்தும் ஆன்ம நலனுக்கு எதிரானவையே.

இலங்கையில் இன்று எழுந்துள்ள மதமுரண்பாடுகளும், கட்டாய மதமாற்றுத் தடைச் சட்டம் பற்றிய பிரச்சாரங்களும் இலங்கையின் சமாதான சகவாழ்வுக்கு உதவப் போவதில்லை. இதுபோன்ற சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அது நிலைமையை இன்னும் மோசமாக்கி மதங்களுக்கிடையிலான நல்லுறவை மேலும் பாதிப்படையச் செய்யும் என்பதை இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. மதங்கள் போதிக்கும் ஆன்மநலனுக்கெதிராக, அன்புறவுக்கு முரணாக மத வாதிகள் எழுவது வருங்காலத்தில் மதங்களின் இருப்புக்கே சவாலாகிவிடும் என்பதை அடிப்படைவாதம் பேசும் மதவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே உண்மையான அரசியல் வாதிகளை மட்டுமல்ல உண்மையான மதவாதிகளையும் இனம் கண்டு கொள்வதோடு பிறமதங்களை மதிக்கவும், மதங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கவும் மத நம்பிக்கை உள்ளோர் அனைவரும் முன்வர வேண்டும்.

## 1969 ஆண்டு பெப்ரவரி மாதம் வெளிவந்த முதலாவது தொண்டன் பத்திரிகையில் வெளிவந்த முன்பக்க செய்தி இது

## உலக சமாதானம் அவசியம் தேவை பாப்பிறையின் அறை கூவல்

விஞ்ஞானத்தில், நாகரீகத்தில், பிற கலைகளில் எல்லாம் முன்னேறிவிட்டதாக மனித சமுதாயம் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறது. அதேவேளையில் போர், போர் ஆயத்தம், பஞ்சம், பசி, கொலை, கொள்ளை என்ற பயங்கர நிலையே காண்கிறோம். இந்நிலை மாறி உலகில் நிரந்தர சமாதானம் வளரவேண்டும். விஞ்ஞானமும் பிற நுண் கலைகளும் இந்த நோக்கினிலே உழைக்க வேண்டும். தத்தம் மனப்போக்குகளை மாற்றி அவற்றில் சாந்தி, நிம்மதி, சமாதானம் வளரச் செய்து சமூகங்களும் நாடுகளும் அகில உலகமுமே இச்சமாதான வழியை நாடவேண்டும். இச்சமாதானம் இறைவனால் மட்டுமே தர முடியும், எனவே இறைவன் வழிநாடி சமாதானம் கண்டு மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனே வாழ்க! வருக!

பண்டிதர் க. சந்திரசேகரனார்
கல்முனை.

பதியுவந்த நசரேய நாத னாரின்
பரலோக நெறிகாட்டும் தொண்டா நின்னை
பற்றோடு வரவேற்றுப் போற்று கின்றோம்
பாரெங்கு மன்புநெறி பரவ வென்றே

தூயதிரு மலைமட்டு மேற்றி ராசனத்தின்
சோதிநாதன் யேசுபிரான் நெறியில் நின்று
தொல்புகழ்சேர் அறிவர்பலர் துறவோர் தங்கள்
திருமறையின் விளக்க ங்கள் தெளியச்சொல்லி

மேயவரு சேவைபுரி செம்மல் பல்லோர்
ஆய்வுரைகள் அழகுதமிழ் மிளிரத் தாங்கி
வேற்றுநெறி செல்வோரும் விரும்பி யுண்ண
வீறுநடைக் கவிதைகதை பலவுங் கொண்டு

ஓய்தலிலா தெம்நாப்பண் உயர்க ருத்தாம்
உணவுதர வருகின்றான் வனப்பு மிக்க
ஒப்பற்ற தொண்டனிவன் வருகை போற்றி
உள்ளமலர் குவித்த வன்றாம் வாழ்த்துவோமே

தொண்டன்
1969 பெப்ரவரி

# ஆலயங்களுக்கும்
## இனிக் காப்புறுதி தேவை!

இடித்து விழும் சத்தம்
இதயத்துள் அதிர்கிறது
இனவாதம்
இயேசுக்கிறிஸ்துவையும் விட்டுவிடவில்லை

சிலுவைகளில் அறைந்தபோதும்
மன்னிப்பளித்த
இறைதூதர் மன்னிப்பாரென்டா
இனவாதிகள்
இடிக்கின்றனர் தூதரின் இல்லத்தை

இனவாதத்தால்
இருண்டது தமிழர்கள் மட்டுமல்ல இனி
சிலுவைகளின் பக்கமும்
இனவாதம்

இயேசுக் கிறிஸ்து
எவரையும் பலவந்தமாக
தன்போதனைக்கு இழுக்கவில்லை

போதிமரத்தடியில் ஞானம்
பெற்றவர்கள் தான் இன்று
போதிக்கின்றனர் இனவாதத்தை

உடைந்தாலும் இடிந்தாலும்
உத்தரவாதமில்லை
இத்தேச அரசியலில்

தமிழர்களைப் போல
இயேசுவின் ஆலயங்களும்
காப்புறுதி செய்துகொள்ள வேண்டும்
இனி.......

எஸ். பி. பாலமுருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

## தலைமுறை இடைவெளி

நாம் எவ்வளவுதான் முன்னேறிவிட்டநிலையிலும் நம்மிடையே தலைமுறை இடைவெளி அதிகமாகிக் கொண்டே செல்வதைக் காணக் கூடியதாய் உள்ளது. ஏதேனும் இரண்டு தலைமுறைகளை எடுத்துக்கொண்டால், காலவோட்டத்தின் காரணமாக இவ்விரண்டு தலைமுறைகளும் தம்முள் முரண்டுபட்டுக் கொண்டு நிற்கின்றன.

இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? வளர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞானம்: அதன் காரணமாக மாற்றம் அடைந்து கொண்டிருக்கும் நாகரீகம். இவற்றை விட நம்மிடையே காணப்படும் விட்டுக்கொடுக்க விரும்பாத மனப்பான்மை: முரண்பாடான கல்வித்திட்டங்கள் ......... என்பனவும் தலைமுறை இடைவெளி பெருகிவிடக் காரணமாகும்.

உதாரணமாக இலங்கையின் கல்வித் திட்டத்தை எடுத்து நோக்குவோம்.

இலக்கங்கள், எண்களைப் பற்றி கற்பிக்கும் போது பின்வருமாறு கற்பிக்கப்பட்டது.

1. ஒன்று
10 பத்து
100 நூறு
1000 ஆயிரம்
10 000 பத்தாயிரம்
100 000 இலட்சம்
10 000 00 பத்து இலட்சம்
10 000 000 கோடி

ஆனால் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக மேற் படிமுறை கைவிடப்பட்டு விட்டது. தற்போது பின்வருமாறுதான் கற்பிறக்கப்படுகின்றது.

1 ஒன்று
10 பத்து
100 நூறு
1000 ஆயிரம்
10000 பத்தாயிரம்
100 000 நூறாயிரம்
1 000 000 மில்லியன் (Million)
10 000 000 பத்து மில்லியன்
100 000 000 நூறு மில்லியன்
1 000 000 000 பில்லியன் ( Billion)

இன்றைய தலை முறை யினருக்கு இவ்வாறு அறிமுகம் செய்து விட்டோம். ஆனால் என்ன நடக்கின்றது...? அன்றாட நடைமுறை வாழ்க்கையில் எல்லாம் தலை கீழாகிவிட்டது. புதினத் தாள்கள், வானொலிச்செய்திகள், தொலைக்காட்சிச் செய்திகள் என்பனவற்றை நோக்கும்போது அவை என்ன செய்கின்றன...?

வெள்ள அகதிகள் பத்து இலட்சம்பேர் ..!
சுப்பர் பரிசு மூன்று கோடிரூபா ...!!
மூன்று இலட்சம் மக்கள் வெள்ளம் ... !!!

தற்போதைய தலைமுறைக்கு இலட்சம், கோடி என்றால் என்னவென்று புரியாது. ஆனால் செய்தி எழுதும் பழைய தலைமுறைக்கோ மில்லியன், பில்லியன் பிடிபடாது போலும்...

பாருங்கள், நம்மையறி யாமலேயே தலை முறை இடை வெளி ஒன்று உருவாகி விட்டது.. சம்பந்தப்பட்டவர்கள் ஆவனசெய்யவேண்டும்.

எப்போதோ படித்து ரசித்த நகைசுவை துணுக் கொன்று!

இளம் தம்பதிகள். மனைவி செல்லமாக வளர்ந்த பெண். சமையல் கலை தெரியாது. சமைத்துத்தான் ஆகவேண்டும் என்பது கணவனின் அன்புக்கட்டளை. மெல்லமெல்ல சமைக்கப் பழகிக் கொண்டாள்.

அன்றொருநாள் கணவன் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்: மனைவி சமையல் கட்டில் இருந்தாள். சமையல்கட்டில் இருந்து மனைவியின் குரல் பாயாசம் ஒருதரம் .... பாயாசம் இரண்டுதரம் பாயாசம் மூன்று தரம் ...' சட்டியொன்று 'டங்' என இறக்கி வைக்கும் சத்தமும்கேட்டது.

கணவன் என்னவென்று சென்று பார்த்தான்: மனைவி பாயாசச்சட்டியை இறக்கி வைத்திருந்தாள், கையில் பாயாசம் செய்வது எப்படி? என்ற சமையல் குறிப்பு, அதனை அவன் வாங்கி கவனமாக வாசித்துப் பார்த்தான் இறுதி வரிகளில் இப்படி இருந்தது

'பாயாசம் நன்றாகக் கொதித்தவுடன் ஏலம் போட்டு இறக்கவும்'

★ அருட்தந்தை போல்றொபின்சனின் வல்லமை கீதங்கள். ஒலிநாடாவரிசையில் அடுத்தபாகம் விரைவில் வெளிவரவுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. சிலவேளைகளில் இதைநீங்கள் வாசிக்கும்போது உங்கள் கைகளில் ஒலிநாடாவோ, குறுவட்டோ தவழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம், சமாதானக் குழந்தை

அப்பனும் அம்மையும்
மாறி மாறி அடிக்கிறார்கள்
தங்கள் சொந்தக் குழந்தையை!
குழந்தை அப்பா பிள்ளையா?
அம்மா பிள்ளையா?
என்பதில் தான் இந்தப் போட்டி
அப்பன் பச்சையப்பன்
அம்மை நீலாம்பிகை
பிள்ளை கொஞ்சக்காலம்
அம்மாவிடம் இருந்தது
வளர்ப்பு ஒழுங்காக இல்லை
குழந்தை நோஞ்சானாகிவிட்டது
அதைக் கண்டு பொறுக்காத அப்பன்
பிள்ளையைக் கையில்
ஏந்திக் கொண்டான்
அம்மாவுக்குப் பொறுக்கவில்லை
குழந்தை தன்னிடம் இல்லாவிட்டால்
உரிமை போய் விடுமே!
அப்பனைத் திட்டுகிறாள்
திட்டிக் கொண்டேயிருக்கிறாள்
அப்பனிடம் குழந்தை
நன்றாக வளர்கிறது
அம்மையின் அடிவயிற்றில்
தீ பரவுகிறது!
குழந்தை அப்பனிடமே
நிரந்தரமாக ஒட்டிக் கொள்ளுமோ?
விடக்கூடாது! விடவே கூடாது!
பாவம் சமாதானக் குழந்தை!

– அருள்மணி –

# 'தொண்டன்' ஊடாக..... அலிகம்பையில் இருந்து உதவிக் குரல்

அலிகம்பை அரசினர் தமிழக்கலவன் பாடசாலை அதிபர் திரு. ஆர். மலர்ராஜன் அவர்கள், தனது பாடசாலையின் அவல நிலையை "தொண்டன்' ஊடாக சம்பந்தப் பட்டவர்களுக்கு தெரிவிக்குமாறு கூறுகின் றார். அவர் கூறுவதன் சாராம்சம் இதோ!

அலிகம்பை கத்தோலிக்க தலத் திருச்சபையும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் அருட்பணி குக் அடிகளா ரின் அயராத முயற்சியில் உருவானவை. இப்பாடசாலை அநர்த்தங்களால் இடம் பெயர்ந்து மீண்டும் சில வருடங்களாக அலிகம்பையில் இயங்கி வருகின்றது. தரம் 7 வரை உள்ள இப் பாடசாலையில் 180 மாணவர்கள் படிக்கின்றார்கள். தளபாடம் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை என்பனவும் இன்னும் பல தேவைகளும் இருக்கின்றன.

இலங்கையிலே 100% கத்தோலிக்க மாணவர்களைக் கொண்ட ஒரு பாடசாலை இதுவாகத்தான் இருக்கும். எனவே சம்பந்தப் பட்டவர்கள் இப் பாடசாலையின் வளர்ச் சிக்கு ஆவன செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் ஒளி!

விஞ்ஞான அறிவு பெருகிவருகிற இந்நாட்களில், மனிதன் பற்பல புதிய சாதனைகளைப் புரிகிறான். ஆனால் அதே சமயத்தில், பலவிதமான புதிய புதிய வியாதிகளும் வாழ்க்கைப் பிரச்சினைகளும், மனிதர்களின் மனதில் அமைதியின்மை. பயம், கவலை, தனிமை போன்ற வேதனைகளைப் பிறப்பிக்கின்றன. இவைகள் பணக்காரர். ஏழைகள், கல்வி ஞானம் பெற்றவர், கல்லாதவர், பக்தியுள்ளோர், பக்தியற்றோர் ஆண்கள் பெண்கள் ஆகிய எவருக்குமே வேறுபாடு ஏதுமின்றி பொதுவானவையாகக் காணப்படுகின்றன. இதன்நிமித்தம் மனிதர்களின் மனம் அளவற்ற அங்கலாய்ப்பினால் தவிக்கிறது. இவற்றை தீர்க்க வழியேதும் காணாததால் இந்த வேதனைகளை மறக்க, ஒரு சில மக்கள் சிற்றின்பங்களில் ஈடுபட்டும் தங்களை பல்வேறு இச்சைகளுக்கு அடிமைகளாக்கியும் தங்கள் கவலையை மறக்க முயலுகிறார்கள். ஆனால் அந்தோ! அவைகள் நிரந்தரமான மனநிம்மதியைத் தரு வதில்லை.

நிரந்தரமான மனநிம்மதியைப் பெற ஏதேனும் பரிகாரம் உண்டா? என்ற கேள்வி பல வாலிப உள்ளங்களில் எழும்புகின்றன.

'ஒரு கழுகு மலையுச்சியிலிருந்து கீழே பறந்து வந்து, ஒரு ஆட்டுக்குட்டியைத் தூக்கிச் சென்றதை ஒரு காகம் கவனித்துக் கொண்டிருந்தது. உடனே காகம், எவ்வளவு இலகுவாக உணவை பெறமுடிகிறது என்றெண்ணி மாம்ச இச்சையில் விழுந்தது. எங்கும் தேடி அலைந்து ஓர் ஆட்டைக் கண்டது. அதுவே தனக்கு உணவு என்று சொல்லி, அதன் மீது பறந்து வந்து உட்கார்ந்தது.தன் கால்களை நன்கு செம்மறியாட்டின் ரோமத்தில் பதித்து தூக்கிப் பறக்க முயன்றது. அந்தோ அதன் கால்களிலுள்ள நகம் செம்மறி ஆட்டின் ரோமத்திற்குள் சிக்கிக் கொண்டது. எப்படியாவது மேலே போக வேண்டும் என்று 'கா கா' என்று கத்தியது; முடியவில்லை. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பன் ஓடிவந்து காகத்தைப் பிடித்து இறகுகளை வெட்டி தன் பிள்ளைகள் விளையாடுவதற்காக வீட்டிற்குக் கொண்டு சென்றான்.

இவ்வாறு தான் வாலிபரில் அநேகர், பல இச்சைச் செயல்களில் சிக்கி, அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறார்கள்! என் அன்புச் சகோதரனே, சகோதரியே! 'என்னிடத்தில் வருகின்ற வனை நான் புறம்பே தள்ளுவதில்லை' (யோவான் 6: 37) என்று வாக்கருளிய, இயேசுவிடம் சென்று 'ஆண்டவரே, நான் ஒரு பாவி! நீர் என்னை நன்கு அறிவீர் எனக்காகவே இந்த உலகிற்கு வந்து உம் இரத்தத்தை சிலுவையில் சிந்தினீர். தயவு செய்து என்மீது இரக்கமாயிரும். என்னை உம்முடைய இரத்தத்தினால் கழுவும், என்னை பரிசுத்தமாக்கும்' என்று கண்ணீரோடு கதறுங்கள்! இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, உங்களைச் சுத்திகரிக்கும்! அவரே பிரச்சினைகளை நீக்கி புதுவாழ்வளிக்கிறாா! சமாதானம் நல்குகிறார்!

க. புவானி திருகோணமலை

# அம்மைத் தடுப்பூசி தோன்றிய வரலாறு

எட்வர்ட் சென்னர் என்பவர் 1796ம் ஆண்டு மே மாதம் 14ம் நாள் ஜேம்ஸ் பிட்சி என்பவருக்கு முதன் முதலில் அம்மைப்பால் தடுப்பூசி போட்டதன் மூலம் இவ்வுலகிலிருந்து பெரியம்மை நோயை விரட்ட முதற்படியை அமைத்துக் கொடுத்தார்.

அவரது வீட்டுக்குப் பாலூற்றும் ஒரு பெண்மணி ஒரு நாள் அவரிடம் "எனக்கு பெரியம்மை நோய் வராது. ஏனெனில் எனக்கு ஏற்கனவே மாட்டு அம்மை போட்டுவிட்டது" என்று சாதாரண மாகக் கூறிய அந்தச் சொற்கள் எட்வர்ட் சென்னரின் மூளையில் தீயை மூட்டியது. அவர் முதன் முறையாக சாரா நெல்டசு என்ப வருக்கு வந்திருந்த மாட்டு அம்மைப் புண்ணி லிருந்த அம்மைப் பாலினை எடுத்து ஜேம்ஸ் பிப்சி என்பவருக்கு ஊசி மூலம் செலுத்தினார். இந்நிகழ்ச்சி நடந்த நாள் 1796ம் ஆண்டு மே மாதம் 14 ஆகும்.

பின்பு இரு மாதங்களுக்குப் பின் ஜுலை மாதம் முதல் நாளன்று மீண்டும் ஜேம்ஸ் பிப்சிக்கு எல்லோரும் அஞ்சி நடுங்கிய பெரியம்மை நோய் கண்டிருந்த ஒருவரின் புண்ணிலிருந்து அதன் நீரினை ஊசி வழியாக அவருக்குச் செலுத்தி அவருக்குப் பெரியம்மை நோயை எதிர்க்கக்கூடிய தடுப்பாற்றல் ஏற்பட்டுவிட்டது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தினார். அம்மை நோய்க்கு சாவு மணி அடிக்கப்பட்ட நாள் அதுவே. உலகெங்கும் அம்மை என்பது ஏதோ ஒரு சூனியக் கோளாறு என்றும், கடவுளின் கோபத்தின் விளைவு என்றும் நம்பி அஞ்சிக் கொண்டிருந்த காலத்தில் அம்மை என்பது ஒரு நோய் என்று விளக்கியதோடன்றி நமது உடம்பிலேயே அந்த நோயினை எதிர்க்கும் சக்தியினை நாம் உருவாக்கிக் கொள்ளலாம் என்று புரட்சிகரமான கருத்தினையும் முதன்முதலில் இவ்வுலகுக்கு தன் ஆய்வுக் கட்டுரை மூலம் எட்வர்ட் சென்னர் அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றத்துக்கு இருபது முட்டுக்கட்டைகள்

1. பணையம் வைப்பதற்குத் தயக்கம். தோல்வி ஏற்பட்டு விடுமோ என்னும் மனநிலை.
2. விடாமுயற்றி இன்மை
3. உடனே திருப்தி. அல்லது பலன் ஏற்பட வேண்டும் என்னும் எதிர் பார்ப்பு
4. முன்னுரிமை தருவதில் குளறுபடி
5. குறுக்கு வழிகளில் நாட்டம்
6. தன்னலமும். பேராசையும் மிகுந்திருப்பது.
7. கொள்கைப் பிடிப்பு இல்லாமை.
8. இயற்கை நியதிகளைப் புரிந்து கொள்ளாமை
9. திட்டமிட்டு தயார்படுத்திக் கொள்ளும் பாங்கு இன்மை
10. காரணம் கற்பித்துக்கொண்டு சமாதானம் அடையும் பண்பு
11. கடந்த காலத் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளத் தவறுவது.
12. வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் இன்மை
13. அச்சம் கொள்ளும் மனப்போக்கு
14. திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பாங்கு அறியாமை.
15. கட்டுப்பாடு இன்மை
16. தன் மதிப்பீடு குறைவு.
17. பொது அறிவு இல்லாமை
18. கர்மவினை என்று கூறிக் கொள்ளும் மனப்பாங்கு.
19. தீர்மானமின்மை.
20. மனத்தைரியம் இல்லாமை.

Dr. K. சிவானந்தம்

## முதலாம் வருட நினைவஞ்சலி



அன்னை மடியில்
26.08.1931

ஆண்டவன் மடியில்
23. 03. 2003



### திருமதி. செபமாலை. ஜெகராஜா

திவ்விய யேசுவே! உத்தரிப்பு ஸ்தலத்து ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும். தாவீதரசனின் புத்திரனாகிய யேசுவே! சிலுவைப் பாரத்தால் அதிகரித்த உமது திருக்காயங்களின் கொடிய வேதனைகளைப் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்து ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும் சுவாமி. தேவரீர் அன்று சிலுவைப் பீடத்தில் பலியாகும் நேரம் பச்சாத்தாபக் கள்ளனுக்குக் கிருபை புரிந்தது போல, இந்த ஆத்துமாவின் பேரில் இரக்கமாயிருந்து இவரை உமது நித்திய பாக்கியத்தில் சேர்த்தருளும். அங்கே சகல புனிதர்களுடனும் சம்மனசுக்களுடனும் தேவரீரை வாழ்த்தி துதித்துக் கொண்டிருப் பார்களாக. ஆமென்

ஜெகராஜா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரேந்திரன் ஆசிரியருடன் தொண்டனின் சில நிமிடங்கள்...



தொண்டனின் தொடர் பேட்டி வரிசையில் திரு. மோ. நரேந்திரன் ஆசிரியர் அவர்களை, இம்முறை சந்தித்தோம். இவர் தனது ஆங்கில இலக்கியப் பட்டப் படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முடித்துக் கொண்டவர்; முப்பத்தேழு வயதினர். ஆரம்பக்கல்வியைக் கொழும்பிலும், கண்டியிலும் பெற்றுக் கொண்ட இவர், தனது பிரதானமான கல்விப்பகுதியை மட்/ மிக்கேல் கல்லூரி தேசியப்பாடசாலையில் பெற்றுக் கொண்டதில் பெருமையடைகின் றார். பழகுவ தற்கு மிகவும் இனிமையானவர், எளிமையானவர்.

நவீன பாணிகளைப் பாவித்து ஆங்கிலம் போதிப்பதில் திறமையா னவர்; அத்துடன் ஆங்கில நாடகங்களை எழுதி இயக்குவதில் புகழ் பெற்றவர். இரண்டு தடவைகள் புலமைப்பரிசில்கள் பெற்று பிரித்தானியா சென்று வந்தவர்.

திரு. எம் நரேந்திரன் அவர்களை பேட்டிக்காக அணுகிய போது சங்கடத்துடன் சம்மதித்தார்.

***கேள்வி:*** உங்களுக்கு ஆங்கிலத்திலும் பின் ஆங்கில இலக்கியத்திலும் ஈடுபாடு வரக்காரணம் என்ன?

**நரேன்:** சிறுவயது முதல் எனக்கு ஆங்கிலத்தில் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அதற்கு முக்கிய மான காரணம் எனது தந்தையார் திரு. மோகரஞ்சிதன் அவர்கள் தான். என்னுடன் இருந்து, என்னில் ஆங்கிலத்தை ஊறவைத்தவர் அவர்தான்.

பின்னர் பாடசாலை நாட்களில் புவனேஸ் ஆசிரியையின் ஈடுபாட்டால் (திருமதி.. புவனேஸ்வரி அகுஸ்தீன் அவர்களின் பேட்டியும் முன்பு தொண்டனில் இடம் பெற்றது வாசகர்களின் நினைவில் இருக்கின்றது அல்லவா....?) நாடகத் துறைக்குள் தள்ளப்பட்டேன். இல்லையில்லை.. கவர்ந்தி ழுக்கப்பட்டேன்.

***கேள்வி:*** ஆங்கில நாடகங்கள் எத்தனை எழுதி இயக்கியுள்ளீர்கள்? அதற்குப் பின்புலமாக இருந்த காரணிகள் எவை?

**நரேன்:** ஆறுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி இயக்கியுள்ளேன். சேக்ஸ்பியரின் நாடகங்களில் நான்கிற்கு மேற்பட்டவைகளை இயக்கியுள்ளேன். இவற்றுக்குப் பின்புலமாக இருந்த காரணிகளில் மிகவும் பிரதானமானது எனது சுய ஆர்வம்தான். அண்மைக்காலமாக ஜெரோம் - டி சில்வா, பேராசிரியர் அஸ்லி ஹல்ப்பே போன்றோரிடம் ஏற்பட்ட தொடர்பும் என்னை நாடகத்துறையில் புடம் போட வைத்தது.

இதுதவிர ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. குமாரசாமி (மட்/புனித. மிக்கேல் கல்லூரி) அவர்களின் ஆங்கில நாடகத்துறை ஈடுபாடும் என்னை ஆங்கில நாடகத்துறையில் ஆர்வத்துடன் இழுத்தெடுத்தது. குறிப்பாக புனித. மிக்கேல் கல்லூரி மாணவர்களின் திறமைதான் என்னை வெளியுலகிற்கு இனம் காட்டின. விசேடமாக ரஜீவன், ஸ்கந்தன், ரஞ்சித் அன்ரனி, றொசான் டிலிமா, விசிஸ்கர் போன்ற மாணவர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

***கேள்வி:*** ஆங்கில நாடக இலக்கியத்தில் நீங்கள் புரிந்துள்ள சாதனைகள் என உங்களால் கருதப்படுபவை எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நரேன்:** 1997, 1998, 1999ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக மூன்று முறை தேசியரீதியில் முதலாம் இடத்தை என்னால் இயக்கிய 'மெக்பேர்க்', 'ஹாம்லட்' 'ஒத்தெல்லோ' போன்ற நாடகங்கள் பெற்றுக் கொண்டன. 2001ல் இரண்டாம் இடம் பெற்றது. 2003ல் தேசிய ரீதியிலான போட்டிக்குத் தெரிவானது. இதில் இன்னொரு பெரிய சாதனை என்னவென்றால் 'இன்ரூடர்ஸ்' என்ற நாடகம் ஏராளமான ரசிகர்களின் பேராதரவைப் பெற்று 27 தடவைகள் மேடையேற்றப்பட்டது. அது இவ்வாண்டு ஆரம்பத்தில், சாரண இயக்கத்தின் தலைமைப் பணிமனையில் நிதியுதவிக்காக கொழும்பில் மேடையேற்றப்பட்டது. சரித்திரத்திலே முதற்தடவையாக, இந்த நாடகம், பேடன்பவலின் நூற்றாண்டு வைபவத்திற்காக 2007ம் ஆண்டு 'சென்பிரானசிஸ்கோவில்' மேடையேற்றப்படவுள்ளது. இதில் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில் கொழும்பில் உள்ள ஆங்கில மொழிமூல பாடசாலைகளையெல்லாம் போட்டிபோட்டே புனித மிக்கேல் கல்லூரி வென்று விருதுகளைப் பெற்றுக்கொண்டது.

***கேள்வி:*** நீங்கள், ஆங்கில நாடகத்துறைக்கு இன்னமும் செய்ய வேண்டும் என ஆசைப்படுபவை எவை?

**நரேன்:** இன்னமும், எம் பிரதேசத்தில் தரமான நாடக அரங்கு ஒன்று இல்லை. நாடகமும் அரங்கியலும் என்னும் பாட நெறியைக் கொண்டுள்ள கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கூட ஒழுங்கான நாடக அரங்கம் இல்லை. அரங்கியல் தொடர்பான நூல்களை எழுத ஆசை.

***கேள்வி:*** உங்கள் கல்விப்பணி பற்றி சில வார்த்தைகள்...?

**நரேன்:** இது பற்றி நான் சொல்வது அழகல்ல... எனது மாணவர்கள் தான் கூறவேண்டும்.

***கேள்வி:*** கல்வித்துறை சார்ந்த நூல்கள் எதுவும் எழுதியுள்ளீர்களா?

**நரேன்:** தேசிய கல்வி நிறுவகம், பாடசாலை மாணவர்களுக்காக, ஆங்கில கதைப்புத்தகங்களை வெளியிடுகின்றது. அப்புத்தக எழுத்தாளர், ஆசிரியர் குழுவின் பத்துப் பேரில் ஒரேயொரு தமிழர் நானே. புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய 'பிரிட்டிஸ் கவுன்சில்' நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று பிரித்தானியா சென்றேன்.

***கேள்வி:*** இப்பிரதேச ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு உங்கள் எதிர்காலத் திட்டங்கள்? ஆலோசனைகள்?

**நரேன்:** 'பிரிட்ஸ்டிஸ் கவுன்சிலின் அனுசரணையுடன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சர்வதேச ரீதியான ஆங்கிலப் பரீட்சைகள் தற்போது மட்டக்களப்பிலேயே நடத்தப்படுகின்றன. அவை எமது ஏற்பாட்டால்தான் நடைபெற்றன. அவை மேலும் விரிவுபடுத்தப்படும்.

***கேள்வி:*** எமது வாசகர்களுக்கு வேறு ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?

**நரேன்:** சமாதானத்தைப் பற்றிய புதிய நாடகம் ஒன்றை நடத்தவுள்ளேன். பல்வேறு திறமையுள்ள, ஆனால் இலை மறைகாயாக உள்ள மாணவர்களை இனம் கண்டு, அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க முன்வருவேன்.

இறுதியில், பல்வேறு சாரணர் உயர் விருதுகளையும் பெற்றிருக்கும் திரு. எம் நரேந்திரன் அவர்கட்கும், பேட்டியின் இணைப்பாளரான அவரது மாணவன் பெ. டிலூக்சாந் அவர்களுக்கும் 'தொண்டன்' சார்பில் நன்றி கூறி விடை பெற்றோம்.

**குறிப்பு:** திரு.எம்.நரேந்திரனின் நாடகங்களை மேடையேற்ற விரும்புபவர்கள் தொண்டன் ஊடாகத் தொடர்பு கொள்ளலாம்.

**– ஆஹ்ரியோன் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் அணுகுமுறை இருந்தால் உலகை ஆளலாம்



உளவியல் என்பது மனித நடத்தை மற்றும் அனுபவங்களை விரிவாக்கும் அறிவியலாகும். இது மனதை ஆராயும் இயல் என்று சொல்லலாம். உடலியக்கச் செயல்களான நீந்துதல், சிந்தித்தல், ஓடுதல், நடத்தல், விளையாடுதல், மற்றும் கற்பனை பொருள் காணுதல் போன்ற செயல்களும் மன எழுச்சியின் அனுபவங்களான கோபம், மகிழ்ச்சி பேன்றனவும் உளவியலுள் அடங்கும். உளவியலில் குழந்தை உளவியல், நெறி பிறள் உளவியல், நடைமுறை உளவியல், பருவவளர்ச்சி உளவியல் என பல பிரிவுகள் உண்டு.

உளவியல் அறிமுகம் இருந்தால் நாம் மற்றவர்களை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இன்றுள்ள மாபெரும் பிரச்சினை ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை தான். இந்தப் புரியாமை கணவன் - மனைவி விரிசல், பெற்றோர் - குழந்தை மனத்தாங்கல், அண்ணன் - தம்பிகளிடையே பகைமை, மாமியார் - மருமகள் இடையே தீராத சண்டை அக்கம் பக்கத்தில் வெறுப்பு, பணி செய்யும் இடங்களில் இறுக்கம்.... என விரிவடைகிறது.

ஒரு குடும்பத்தின் தலைவனோ, தலைவியோ, ஒரு நிருவாகத்தின் பொறுப்பில் உள்ளவர்களோ, பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களோ உளவியல் அறிந்தவர்களாக இருந்தால் எப்படி நடந்து கொள்வார்கள் தெரியுமா?

* தன்னோடு உள்ளவர்களின் மதிப்பை உயர்த்துவார்.
* அவசர தேவைகளுக்கு உதவுவார்.
* முடிவெடுக்கத் திணரும் போது வழிகாட்டுவார்.
* பாராட்டிப் பரிசளிப்பார்.
* நெருக்கடியைத் தளர்த்துவார்.
* வேடிக்கையாகவும் அனுசரணையாகவும் பேசுவார்.
* நகைச்சுவை உணர்வு கலந்திருக்கும்.
* மற்றவர்கள் கூறும் கருத்துக்களை பொறுமையுடன் கேட்பார்.
* தன்னுடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வார்.
* சமூகப் பிரச்சினைகளுக்கு ஏற்ப உள்ளம் கிளர்வார்.
* மீண்டும் மீண்டும் ஒரு கருத்தை வலியுறுத்துவார். (நாகரீகமாக)
* நெறிப்படுத்துவார்.
* நாசூக்காக மறுப்பார்.
* மற்றவர்களிடமிருந்து மாறுபடுவார், வேறுபடுவார்.

Dr. R. பரமேஸ்வரன்

மொத்தத்தில் தலைமைப் பண்பு நிறைந்த ஒருவரைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் பற்றி நாலவர்...

- ஆழியோன்

## ஒரு கருத்துச் சிதறல்

முப்பத்தைந்து வருடங் கள் என்பது, இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பெரிய சாதனைதான். அத்தகைய வரலாற்றுச் சாதனையை, இவ்வருடம் 'தொண்டன்' புரிகின்றான். இவ்வகையில் 'தொண்டன்' இதழைப்பற்றி நால்வரின் அபிப்பிராயங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**முதலில் அருட்சகோதரர் பிறைனர்** அவர் களிடம் 'தொண்டன்' பற்றி வினவினோம். அவர் இதுபற்றிக் கூறுகையில் தாம் 'தொண்டனை' சுமார் ஐந்து ஆண்டுகளாக வாசிப்பதாகத் தெரிவித்தார். இலக்கியப்பகுதி, திருச்சபைச் செய்திகள், பிந்திய சமகால விடயங்கள் என்பன தம்மைக்கவர்ந்தவை என்றார். குறிப்பாக மறைந்த ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை பற்றிய சிறப்பிதழ் போன்ற சிறப்பிதழ்கள், தரமான அச்சுப்பதிவு என்பனவும் பாராட்டத்தக்கவை என்றும் குறிப்பிட்டார்.

எழுத்தாளர்களின் எண்ணிக்கை கூட்டப்படல் வேண்டும்: பைபிள், திருச்சபை சம்பந்தமான பகுதியை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். உளவியல், மருத்துவப்பகுதி என்பனவும் அவை தொடர்பானவர் களுடனான பேட்டிகளும் பெருமளவில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் அருட் சகோதரர் பிறைனர் கேட்டுக் கொண்டார்.

தான் தேசிய குருத்துவக்கல்லூரியில் கற்றபோது, 'ஞானப்பிரகாசியார் தமிழ் மன்றம்' நடாத்திய மறைமாவட்ட சஞ்சிகைகள் பற்றிய ஆய்வில் 'தொண்டன்' சிறப்பாகப் பாராட்டப்பட்டது என்ற தக வலையும் தெரிவிக்க அவர் தவறவில்லை.

**அடுத்து திருமதி. புவனேஸ்வரி அகுஸ்தீன்** கருத்து தெரிவிக்கையில் ஆரம்பகாலம் தொட்டே தாம் 'தொண்டன்' வாசகியாக இருப்பதாகப் பெருமைப் பட்டார். பயணக்கட்டுரைகள் தம்மைப்பெரிதும் கவர் வதாக குறிப்பிட்ட அவர் 'புனித நாட்டுப் பயணங் கள்' என்ற தொடர்கட்டுரை மிகவும் சிறப்பானது என்றார்.

அண்மைய காலங்களில் 'இலக்கிய மஞ்சரி' மிகவும் காத்திரமாகக் காணப்படுகின்றது. அத்துடன் சில சிறு கதைகள் மனதைக்கவர்ந்து செல்கின்றன. என்றும் குறிப்பிட்டார். சிறந்த சேவையாளர்களைப் பேட்டி காணும் அம்சங்கள் தொடர வேண்டும்: சிறுவர் பகுதியை நடைமுறைப்படுத் துவதுடன் சிறிய சிறிய கதைகள் மூலம் அவர்களைக் கவரலாம் என தம் ஆசைகளையும் திருமதி. புவனேஸ்வரி அகுஸ்தீன் தெரிவித்துக்கொண்டார்.

**திருமதி. காமலிற்றா பாத்லெட்** எனும் குடும்பத்தலைவி 'தொண்டன்' பற்றி சொல்கையில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக வாசிப்பதாகக் குறிப்பிடுகின்றார். காலத்திற்குப் பொருந்தக் கூடியவாறு சிறப்பிதழ்கள் வெளிவருவது பாராட்டுத்தற்குரியது என்றார். தொண்டனின் விலையும் கட்டுபடியாகக் கூடியதாக உள்ளது என்று குறிப்பிட்ட அவர் திருச் சபை தொடர்பான விடயங்களை அதிகரிக்க வேண்டும் என்றார்.

திருச்சபைச் செய்திகளை கூடிய அளவு 'தொண்டன்' தரவேண்டும். சில வேளைகளில் கவிதை கள் பெரிய பெரிய எழுத்துகளில் ஒரு முழுப்பக் கத்தைப் பிடிக்கின்றன. சிறிய எழுத்துகளில் அவற்றை வெளியிட்டால் இன்னுமொரு ஆக்கத்திற்கு இடம் கிடைக்குமே .. என்றும் அவர் ஆதங்கப்பட்டார்.

**பாடசாலை மாணவன் பெ.டிலுாக்சாந்** கருத் துக் கூறுகையில், பாடசாலை மாணவர்களின் இலக் கியப்பங்களிப்பை அதிகரிப்பதற்காகவும், பாடசாலைப் பிள்ளைகளின் இலக்கிய மன்றச் செய்திகளைப் பெறவும், பாடசாலைகள் தோறும் செய்தியாளர்களை நியமிக்க வேண்டும் என்றுகேட்டுக்கொண்டார்.

நாடக இலக்கியங்களையும் இடையிடையே அச்சுருவாக்கம் செய்யவேண்டும்: விலையை சற்று அதிகப்படுத்தினாலும் பரவாயில்லை பக்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

குறிப்பாக மாதம்மாதம் தவறாது 'தொண்டன்' வெளிவர ஆவனசெய்யவேண்டும்: இரண்டு மாத இதழ்களை ஒன்றாக வெளியிடுவதைத் தவிர்த்து தனித்தனியே தொடர்ந்து வெளியிடுவது சிறப்பாக இருக்கும் எனவும் டிலுாக்சாந் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையூற்றில் கத்தோலிக்கப் பாடசாலையின் ஆரம்ப வைபவம்




2004 தைத்திங்கள் 16ஆம் நாள் பாலை யூற்று லூர்து அன்னை திருத்தல வரலாற்றில் மற்றுமொரு மறக்கமுடியாத நாளாகப் பதிவாகி யுள்ளது. இப்பங்குக் கத்தோலிக்கர், புத்திஜீவி களின் நீண்டநாள் கனவு நனவாகிய அந்தப் பொன்னான நாளில் தான் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 2005ஆவது பாடசாலை பாலை யூற்றுக் கிராமத் தில் மாகாணக் கல்விப் பணிப் பாளர் திரு. இ. யு. மகாலிங்கம் அவர்களினால திறந்து வைக்கப்பட்டது.

பங்குமேய்ப்புப் பணிச்சபையின் ஏற்பாட் டில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்திற்கு வருகை தந்திருந்த பிரதம விருந்தினர், கல்வி அதிகாரிகள் திருத்தல வளாகத்தின் நுழை வாயிலில் மாலைகள் அணிவிக்கப்பட்டு பாலை யூற்று இதய தீபம் முன்பள்ளி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் வரவேற்கப்ப ட்டனர்.

சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளை அடுத்து மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு .சு. தியாகலிங்கம் இப்புதிய பாடசாலைக்கு தி/லூர்து அன்னை றோமன் கத்தோலிக்க வித்தி யாலயம் எனப் பெயர் வழங்கி பிரகடனப்படுத் தினார். பிரதம விருந்தினரான திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இரா. சம்பந்தன் பாடசாலையின் பெயர்ப் பல கையை திரை நீக்கம் செய்து வைத்தார்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாநில ஆயரின் பிரதிநிதி அருட்பணி அன்ரனி லியோ புதிய பாடசாலையினை ஆசீர்வதிக்க, திருகோணமலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. கிளமன்ட் அன்னதாஸ் மாணவர் களுக்கு கழுத்துப்பட்டி அணிவித்து ஆசியுரை வழங்கினார். திருகோணமலை கோட்டக்கல்வி அதிகாரி திரு. N. சந்திரகாந்தன் மாணவர்களுக்கு பாடநூல் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு K. திலகரெட்னம், உதவிக் கல்விப் பணிப் பாளர் திரு. கிறிஸ்ரி முருகுப்பிள்ளை கிராம சேவை உத்தி யோகஸ்தர்கள், அருட்தந்தையர், அருட் சகோதரிகள், பொது மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கௌரவ விருந்தினரான திரு.S.மகாலிங்கம் உரையாற்றும்போது 'தென்னி லங்கையில் பாடசாலைகள் பல மூடப்பட்டு வருகின்ற நிலை காணப்படுகிறது. இங்கு அண்மித்த தூரத்தில் பாடசாலைகள் இருந்தும் பாலை யூற்று சமூகத்தின் தேவை கருதி புதிய தொரு பாடசாலை உருவாகியிருப்பது மக்கள் கல்வி வளர்ச்சியில் கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது' எனப் புகழ்ந்துரைத்தார்.

இறுதியாக பங்கு மேய்ப்புப்பணிச் சபைச் செயலாளர் திரு R.அருட்பிரகாசம் வழங்கிய நன்றியுரையுடன் மேற்படி வைபவ நிகழ்வுகள் நிறைவுற்றன.

*தகவல் :- பு. அல்பேட்*
*உதவிச் செயலாளர் - மே. ப. சபை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பா? பிறப்பா?

அருட்திரு. அ. பெஞ்சமின்



*ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே - மனிதன்*
*ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே*
*- இது பட்டுக்கோட்டைக் கலியாண சுந்தரனாரின் கூற்று*
*ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி*
*மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை*
*மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்*
*ஊற்றைச் சடலம்விட்டே என் கண்ணம்மா!*
*உன் பாதம் சேரேனோ?*



என்று ஏக்கத்தோடு அங்கலாய்கிறார் அழுகணிச் சித்தர். இந்த அங்கலாய்ப்புக்கு வழிவகுப்பதுதான் இயேசுவினுடைய உயிர்ப்பு.

**உயிர்ப்பின் பொருள்**

உயிர்ப்பு என்பதை இரண்டு விதத்தில் புரிந்து கொள்ளலாம்.
1) இறந்த ஒருவரை வாழ்ந்திருந்த நிலைக்கு மீண்டும் கொண்டு வருவது
2) இறந்த ஒருவருக்கு நிலையான புதிய வடிவத்தில் வாழ்வு அளிப்பது. இந்த இரண்டாவது பொருளில் தான், நாம் விவிலியத்தில் உயிர்ப்பைப் பற்றிப் பொருள் விளக்கம் காணும் போது எடுத்துக்கொள்கிறோம்.

இறந்துபோன ஒருவரை மீண்டும் அவர் இருந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளதாகப் பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் வாசிக கிறோம். எடுத்துக்காட்டாக: (1அரச 17: 17- 24) இல் எலியா, சாரிபாத்துக் கைம்பெண்ணின் மகனை உயிர்ப பிக்கின்றார்; 2அர4; 18-37 இல் சுனேமியப் பெண்ணின் மகனுக்கு எலிசா உயிர் அளிக்கிறார். (காண். 2அர 13:20 தொ).

இந்தப் பகுதிகளில் வரும் நிகழ்ச்சியில் இறந்தவர் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, முன் இருந்த நிலையில் அமர்த்தப்படுகின்றனர். இதை உயிர்ப்பு என்று புரிந்து கொள்ள (2வது பொருளில்) முடியாது. அழியாத நிலைக்கு அழைத்துச செல்லும் பொருளில் உயிர்ப்பில் நம்பிக்கை அவ்வளவாகப் பழைய ஏற்பாட்டுத் தொடக்கத்தில் இல்லை. இந்தக் கருத்து பின்னரே வளர்ந்தது (காண். தானி 12:2)

பரிசேயர் உயிர்ப்பில் நம்பிக்கை வைத்தனர். சதுசேயர்களும், சமாரித்தர்களும் உயிர்ப்பில் நம்பிக்கை வைக்கவில்லை. இதைப் பற்றி யூத வரலாற்று ஆசிரியர் யோசபுஸ் பிளாவியுஸ் என்பவரும் குறிப்பி டுகிறார். (காண்க. மத் 22: 23;) உயிர்ப்பில் நம்பிக்கையைப் பற்றித் திருவெளிப்பாட்டு இலக்கியங்களில் காண்கிறோம்.

சில பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில் உயிர்ப்பில் நம்பிக்கை காணப்படுவது போல் தோன்றுகிறது. இருப்பினும் தெளிவாகக் கூறப்படக் காணோம். எடுத்துககாட்டாக எசே 37: 1-14இல் இறந்த உடலுக்குப் புது வாழ்வு தரப்படுவதை வாசிக்கி றோம். ஆனால் இந்தப்பகுதி ஒரு காட்சியைப் பற்றி விவரிக்கிறது. உலர்ந்த எலும்புகள் மீண்டும் உயிர் பெற்று மனிதனாக எழுந்தது ஓர் அடையாளமாக இங்குத் தரப்பட்டுள்ளது. அந்தக் காட்சி, பாபிலோன் அடிமை வாழ்வில் இருக்கும் இஸ்ராயேலர் திரும்ப வருவதை உணர்த்துமே அன்றி, உடல் உயிர்ப்பை உணர்த்தவில்லை. (காண். 37; 11-14)

எசாயா 26:19 தெளிவாக உயிர்ப்பைப் பற்றிக் கூறுகிறது. சில அறிஞர்களின் கருத்துப்படி இந்தப் பகுதியானது காலத்தினால் பிற்பட்டது என்பர்; தானியேல் நூலின் காலத்தைச் சேர்ந்தது என்பர். வேறு சிலர் கருத்துப்படி இங்குக் கூறப்படும் உயிர்ப்பு, இறந்த உயிர் வாழ்ந்த நிலையிலே மீண்டும் நிலைநாட்டுதலை (restolration)க் குறிக்கும். அதாவது அடிமையாக இருக்கும் இஸ்ராயேலர் விடுவிக்கப்பட்டு மீண்டும் நல்வாழ்வு பெறுவர் என்பதாம். இந்தப் பொருளில் (எசா 26:19; எசே 37: 1-14ஐ ஒத்துள்ளது.

எசாயா 53:10-12 பகுதியில் “ஆண்டவருடைய ஊழியன்” என்பரைப்பற்றி விளக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் வரும் வார்த்தைகள் உடல் உயிர்ப்பைப் பற்றிக் கூறவில்லை; மீண்டும் நல்வாழ்வு வழங்கப்படும் என்பதையே உணர்த்துகின்றன. இவைகளை ஆராய்ந்தால் பழைய ஏறபாட்டின் தொடக்கத்தில் உயிர்ப்பு என்பது “நிலையான வாழ்வு மாற்றி அளிக்கப்படுகிறது” என்ற கருத்தில் காணப்பட வில்லை என்றே கூறலாம்.

**புதிய ஏற்பாட்டில்**

மூன்று முக்கிய புதுமைகளை நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். ஒன்று யாயீர் என்பவருடைய மகள் உயிர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது நயீன் ஊர்க் கைம்பெண்ணின் மகன் உயிர் பெறுதல். மூன்றாவது இலாசர் உயிர் பெற்றது. இதோ போன்ற நிகழ்ச்சி ஒன்றைத் திருத் தூதர் பணிகள் (20:8-12இல் வாசிக்கின்றோம்.

இவை நான்குமே புது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அடைந்த உயிர்ப்பைக் கூறவில்லை; மாறாக மீண்டும் நல் வாழ்வைப் பெற்றதையே உணர்த்துகின்றன. இவர்கள் அனைவருமே மீண்டும் இறந்து விட்டார்கள். எனவே இவர்கள் பெற்ற உயிர்ப்பு "புதிய நித்திய வாழ்வு நிலையை உணர்த்தும் உயிர்ப்பு" அன்று என்பது தெளிவு.

**இயேசுவின் உயிர்ப்பு**

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் உயிர்ப்புப் பற்றித் தெளிவாகத் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. இயேசு அடக்கம் செய்யப்பட்ட காலியான கல்லறையைப் பற்றியும், உயிர்த்த ஆண்டவரின் காட்சிகளைப்பற்றியும் தான் கூறப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் உயிர்ப்பைப் பற்றிக் காணப்படும் தெளிவான தொன்மையான சான்று 1கொரி 15: 3-8. இது கூட விசுவாச அறிக்கையைப் பற்றிய பகுதிகளில் இருந்து வருவதாகவே அறிஞர் கருதுகின்றனர். தொடக்கத் திருச் சபையில் நிலவிய விசுவாச அறிக்கைகள், வழிபாட்டுப் பாடல்கள், மன்றாட்டுக்கள், திருத்தூதரின் போதனைகள், மறைக்கல்வி போன்ற பகுதிகள் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிக் கூறும் மிகவும் தொன்மைவாய்ந்த பகுதிகளே இயேசுவினுடைய உயிர்ப்பு, தொடக்கத் திருச் சபையில் முக்கிய போதனையாகவும், திருத்தூதர்களின் போதனையினுடைய மையப் பொருளாகவும் இருந்திருக்கிறது. இதற்கு 12 பேரும் சாட்சிகளாவர். (தி.ப 1:22)

நற்செய்தி நூல்களில் வரும் இயேசுவினுடைய உயிர்ப்பைப் பற்றிய பகுதிகள் சிறு சிறு வேற்றுமைகளைக் கொண்டிருந்தாலும், பொதுவான கருத்திலும் போதனையிலும் ஒத்துள்ளன.

ஒருங்கமைவு நற்செய்தியில் இயேசு தம்முடைய இறப்பு, உயிர்ப்பு போன்றவைகளைப் பல முறைகூறுவதை வாசிக்கின்றோம். இவைகளைச் சீடர்கள் புரிந்து கொள்ளவில்லை; உயிர்ப்புக்குப் பிறகும் கூட சில சமயங்களில் சீடர்கள் உயிர்த்த இயேசுவை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இவைகளை நோக்கும் போது இயேசுவினுடைய உயிர்ப்பு பழைய வாழ்விற்கு மீண்டும் திரும்பின நிலையன்று எனத் தெரிகிறது. ஆனால் லாசர், நயீன் நகரக் கைம்பெண்ணின் மகன், யாயீர் என்பவரின் மகள் போன்றவர்கள் மீண்டும் உயிர்பெற்ற போது மற்றவர்கள் அவர்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் போகவில்லை; விந்தையான ஒரு நிலையில் அவர்கள் வடிவுமாறி இருக்கவும் இல்லை. இதனால் இயேசுவின் உயிர்ப்பு தனிப்பட்ட தன்மை வாய்ந்தது என்பது தெளிவு.

இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ச்சி இயற்கைக்கு மேற்பட்ட அது வரலாற்றில் நிகழ்ந்த உண்மைச் செயல். ஆனால் வரலாற்று ஆராய்ச்சிக்கு உட்பட்டது கிடையாது. **வரலாற்று நிகழ்ச்சி; ஆனால் நம்பிக்கையினால் ஏற்க வேண்டிய ஒன்று.** தொடக்கக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் இந்த உயிர்ப்பில் கொண்ட நம்பிக்கையை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆராய முடியும். உயிர்ப்பு நிகழ்ச்சி வரலாற்றுப் பள்ளி மேற்கொள்ளும் ஆராய்ச்சி முறையினால் நிரூபிக்கக் கூடிய தன்று; நம்பிக்கையினால ___ (Faith) விளங்கக் கூடியதொன்று.

இயேசுவினுடைய உயிர்ப்புச் செயலை ஒரு நிகழ்ச்சியாகக் கண்டுபிடித்தல் ஒரு பெரிய செயலன்று; மாறாக அதை ஒரு மீட்புச் செயலாக ஏற்றுக் கொள்ளுதல் என்பது தான் ஒரு பெரிய செயல். இதுவே நம்பிக்கை (விசுவாசம்). இதன் வழியாக மற்றவர்களும் மீட்புப் பெறுவர் என்பது நம்பிக்கையின் வளர்ச்சி (ஒப். யோவான் 20: 29).

**உயிர்ப்பின் இறையியல் பொருளாழம்.**

மீட்பு என்பது தந்தையின் செயல். இதைப் பவுல் அடிகளாரின் எழுத்துப் படைப்புக்களில் காண்கின்றோம். தந்தை தான் இயேசுவை உயிர்ப்பிக்கிறார். (உரோ:4:28; 1கொரி 6:14; 2கொரி 4:14). இயேசுவினுடைய உயிர்ப்பு அவரை ஒரு புது வாழ்விற்கு, மாறுபட்ட வாழ்வு நிலைக்கு முந்தியிருந்த நிலையில் இருந்த வேறுபட்ட ஒரு நிலைக்குக் கொண்டு வருகிறது. இந்தப் புது வாழ்வு தந்தையிடமிருந்து வருவது. அவரே வாழ்வின் ஊற்று. இந்த உயிர்ப்பும் இயேசுவினுடைய மகிமை என்பதும் ஒன்றே. (காண்.உரோ8:34;) இயேசு உயிர்ப்பின் மூலம் கடவுளின் மகனாக நிர்ணயிக்கப்படுகிறார். (உரோ 1:4).

இயேசு உயிர்ப்பு மூலமே புதுவாழ்வை வழங்குகின்றார். இதையே நாம் திருமுழுக்கு மூலம் பெறுகிறோம். தம் மகனை உயிர்ப்பித்த தந்தை, மகனைப் போல அவருடைய மகனோடு, மகனில் அவர் தம் விருப்பத்தை நிறைவேற்றுபவர்களை உயிர்ப்பிக்கிறார்.

மகனில், மகனோடு, மகன் வழியாக நாம் தந்தையால் உயிர்பிக்கப்படுகின்றோம். (2கொரி 4:14). இயேசுவோடு இறந்தவர் இயேசுவோடு வாழ்பவர் (2திமோ2:11). இயேசுவே உயிர்ப்பும் உயிரும்; அவரில் நம்பிக்கை வைப்போரை அவர் கடைசி நாளில் உயிர்பிப்பார். (யோவா 11:25; 6:39-44,54). இந்தக் கருத்தை 1கொரி 15இல் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லப்படுவதைக் காண்கின்றோம்.

கிறிஸ்துவே புதுப்படைப்பின் முதல் பேறு; அது போல அவரே புதுவாழ்வின் ஊற்றும் கூட. இந்தப் புதுவாழ்வு அவருடைய உயிர்ப்பினால் தொடங்கப்படுகிறது. (கொ லோ2:12 தொ). அவரோடு நம்மையும் தந்தை வலப்பக்கத்தில் அமர்த்துகிறார். (எபே2:5தொ)

தந்தையின் விருப்பத்தை இயேசுவைப் போல் நிறைவேற்றுதல் என்றாலும் பாவச் செயல்களை தவிர்த்தல் என்றாலும், ஊனின் இயல்புக்கு இறத்தல் என்றாலும், ஆவியில் புதுநிலைப் பெறுதல் என்றாலும் ஒன்று தான். தந்தையின் உறவில் வளரும் போது உடல் இறந்தாலும், அஃது உறக்கமே தவிர சாக்காடு அன்று. எனவே தான் இலாசர், யாயீரின் மகள் போன்றோர்களை" உறங்குகின்றார்கள்" என்று இயேசு கூறினார். உடல் உயிரோடு இருந்தாலும், இறை உறவு முறிந்த நிலை தான் இறையியல்பின் படி இறப்பு (காண். லூக் 15: 24).

நோன்பின் மூலம் ஊனின் இயல்புக்கு சாகிறோம்; ஆவியில் புதுமனிதனாக உயிர்க்கிறோம். இந்த வளர்ச்சியின் உச்சக்கட்டம் தான் உடல் சாவு. அதுவே உயிர்ப்பின் வாழ்வுக்கு இறுதி வாசல் படி. ஆகவே தான் நம் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இதன் படி பார்த்தால் நமக்கு இயேசுக் கிறிஸ்துவில் இறப்பு என்பது இல்லை. பிறப்பு தான் உண்டு! முடிவு என்பது இல்லை!! முதல் என்பது தான் உண்டு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

க.பொ.த (உயர்தரம்)

## கத்தோலிக்க திருமறை

– செல்வி. நில்மினி ஜோசப் –

## வேதாகமம்



**வேதாகமத்தின் அறிமுகம்:-**

உலகில் மிகவும் புகழ் பெற்ற நூல் திருவிவிலியம் எனும் வேதாகமம் ஆகும். கத்தோலிக்கர்களின் பூர்வீகச் சொத்தாக இது போற்றப்படுகிறது. இறைவனின் தனிப்பட்ட ஏவுதலால், மனிதனைத்துணையாகக் கொண்டு எழுதப்பட்டு, அன்னையாம் திருச்சபையால் அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தனித் தன்மை கொண்டு விளங்கும் ஓர் உன்னத புனித நூலாக கிறிஸ்தவர்களால் மதிக்கப்பட்டு வருகிறது வேதாகமம்.

வேதாகமத்திற்கு பைபிள், விவிலியம், வேதநூல் என்றும் பல பெயர்கள் உண்டு. தற்போது 'பைபிள்' என்றழைக்கப்படும் ஆங்கிலச் சொல் 'பிபுளுஸ்' எனும் கிரேக்கச் சொல்லில் இருந்தே வந்தது. இது ஒரு புல் தண்டின் பெயராகும். 'பிபிளம்' என்ற (புத்தகம்) பெயர் பின்பு பைபிளாக பெயர் பெற்றது.

இந்நூலை பல யூதர்களும், கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் ஒரு புனித நூலாக மதித்து வருகின்றனர். இந்நூலுக்கு ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் தங்கள் உயிரை விட மேலாக, விசுவாசத்தின் ஆணி வேராக மதிப்பளித்து இதற்கு ஆலயங்களில் தூபம் காட்டியும், வணக்கம் செலுத்தியும், பரிசுத்தமாய் பராமரித்து வந்துள்ளனர். இவ்வாறாக இந்நூலை அவர்கள் பாதுகாக்கக் காரணம் இது இறைவன் தந்த நூல், இறைவனின் வாழ்வளிக்கும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது என்பதலாகும்.

இந்நூல் வழியாக இறைவன் எம்மிடம் பேசுகிறார்; எம்மைச் சந்திக்கின்றார்; எம்மிடம் தம் எதிர் பார்ப்பை எடுத்துக் கூறுகின்றார். இதனாலேயே இதற்குப் புனிதத் தன்மை அளிக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் தம் இரத்தத்தைச் சிந்தியும், விலங்குகளுக்கு உணவாகத் தம்மைக் கொடுத்தும், பகைவர்களிடம் இருந்து இதனைப் பாதுகாத்தனர்.

இந்நூலானது திடீரெனத் தோன்றியதல்ல. பல்லாண்டு காலமாக, படிப்படியாகத், தோன்றிய ஓர் உருவாக்கமாகும். மனிதன் இவ்வுலகில் தோன்றிய காலம் தொடக்கம் இறைவன் அவர்களோடு தொடர்புகொள்கிறார். அவர்களுக்குத் தம்மையும், தம் உண்மையையும், தம் இயல்பையும், பிரசன்னத்தையும், பல முறைகளில் காட்டுவதையும், நாம் மனித வரலாறு வழியாகவும் பல நிகழ்வுகள் மூலமாகவும் காணமுடிகிறது.

இவ்வாறு இஸ்ராயல் மக்கள் காலம் காலமாகத் தாம் பெற்ற இறை அனுபவங்களையும் இவற்றினூடாகத் தாம் பெற்றுக் கொண்ட இறையறிவையும், தொடரும் தம் தலைமுறைகளோடும் பகிர்ந்துகொள்ள விரும்பினர். எனவே இவைகளனைத்தும் இஸ்ராயலின் வாய்மொழியாகப் பாதுகாக்கப்பட்டு வந்து பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வந்தன. இவ்வாறு தாம் பட்டனுபவித்த சம்பவங்கள் வாயிலாகவும், பிதாப்பிதாக்கள், நீதிபதிகள் அரசர்கள், இறைவாக்கினர்கள் வழியாகவும் கொண்டு செல்லப்பட்டு வார்த்தையாக மனுவுருவெடுத்த இறைமகன் இயேசுவிலே முழுமை பெற்று நிறைவினை அடைந்தது வேதாகமம் எனும் புனித நூல்

தொடரும்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுப்போட்டி!



## பிள்ளைகளுக்கு மட்டும்

முடிவுத்திகதி :- 30.04. 2004

## விவிலியம் கற்போம் - 30

(விடுதலைப் பயணம்)
5:22-23, 6:10-12 7:8-13

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து இடைவெளிகளை நிரப்புக.)**

மோசே .............. திரும்பிச் சென்று ................. தலைவரே! இம்மக்களுக்கு............... ஏன்தொல்லை கொடுக்கிறீர்? எதற்காக இப்படி என்னை அனுப்பி வைத்தீர்? உமது பெயரால் பேசுவதற்காகப் பார்வோனிடம் வந்ததிலிருந்தே இம்மக்களுக்கு அவனால் ........... ஏற்பட்டுள்ளது. அத்துடன் நீர் உம்மக்களுக்கு விடுதலையளிக்கவும் இல்லை என்று கூறினார். ஆண்டவர் மோசேயை நோக்கி, 'எகிப்திய மன்னனாகிய பார்வோன் தன் நாட்டிலிருந்து ........... மக்களை அனுப்பி விடும்படி நீ அவனிடம் போய்ச் சொல் என்றுரைத்தார். ........... ஆண்டவரிடம் பேசி, 'இஸ்ரயல் மக்களே எனக்குச் செவிசாய்க்காதிருக்க பார்வோன் எவ்வாறு எனக்கு செவிசாய்க்கப் போகிறான்? நானோ பண்பட்ட உதடுகள் இல்லாதவன் என்று சொன்னார். ஆண்டவர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி,' அருஞ்செயல் ............... காட்டி உங்களை மெய்ப்பியுங்கள் என்று பார்வோன் உங்களுக்குக் கூறினால், நீ ஆரோனிடம் உன் கோலை ......... பார்வோன் முன்னிலையில் விட்டெறி அது பாம்பாக மாறும் என்று சொல் என்றார். மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் சென்று ஆண்டவர் இட்ட கட்டளைக்கிணங்க செயல்பட்டார்கள். ........... தனது கோலை பார்வோன் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் விட்டெறிய அது ........... மாறியது. பார்வோன் தன் ஞானிகளையும் சூனியக்காரர்களையும் வரவழைத்தான்.எகிப்திய மந்திரவாதிகளாகிய அவர்களும் தங்கள் வித்தைகளால் அவ்வாறே செய்தார்கள். ஆனால் ஆரோனின் கோல் அவர்கள் கோல்களை விழுங்கி விட்டது.பார்வோனின் மனமோ கடினப்பட்டது. ஆண்டவர் முன்னுரைத்தபடி அவன் அவர்களுக்குச் செவிசாய்க்கவில்லை.

விடைகள்: *இஸ்ரயல், பாம்பாக, இடறல்தான், ஆரோன், நீர், எடுத்து, என், ஒன்று, ஆண்டவரிடம், மோசே*

(வினாப்படிவத்திலேயே விடைகள் அனுப்பப்பட வேண்டும் பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி
30-04-2004

# பரிசுப்போட்டி!



## அறிவை வளர்ப்போம் ~ 30

**(சரியான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. ஐக்கிய நாடுகள் அவையின் செயலாளர் நாயகம் இவர்
   (கொபிஅனான், ஜோர்ஜ்புஸ், பில்கிளின்டன்)

2. விஞ்ஞானியாக இருந்து நாட்டின் தலைவராக உயர்ந்த இந்தியர்
   (இந்திராகாந்தி, அப்துல்கலாம், சர் சி. பி. ராமன்)

3. ஐரோப்பிய நாணயம் இவ்வாறு அழைக்கப்படுகிறது
   (டொலர், ரூபள், யூரோ)

4. கட்டபொம்மனுக்கு எட்டப்பன் போல இயேசுவுக்கு....
   (தோமாஸ், பிலாத்து, யூதாஸ்)

5. இலங்கை ஐ. நாவில் உறுப்புரிமை பெற்ற ஆண்டு
   (1955, 1950, 1952)

6. கர்நாடக சங்கீதத்தில் மேளகர்த்தா இராகங்களின் எண்ணிக்கை
   (68, 70, 72,)

பெயர் ..........................................................

முகவரி ..........................................................

..........................................................

..........................................................

அனுப்பவேண்டிய முகவரி
விவிலியம் கற்போம்/ அறிவை வளர்ப்போம்
தொண்டன்
அ. பெ. எண். 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணமான இரவிலே

எஸ். ஜெயராஜா.

சித்திரை மாதத்தை எபிரேய மொழியில் நிஸான் அல்லது அபி என்று அழைப்பார்கள். இது, யூதமத வழக்கப்படி அவர்களுக்கு பாஸ்கா விழாக்காலம். பாலைவனச் சந்நியாசிகள், சூரியனைக் கொண்டு கணக்கிட்டுள்ள நாட்குறிப்பின் படி இவர்கள் இதைக் கொண்டாடுகிறார்கள். பரிசேயர்கள், சதுசேயர்களின் நாட்குறிப்பு, சந்திரனைக் கொண்டு கணக்கிடப்பட்டு இருந்ததால் அவர்கள் இவ்விழாவை இரண்டு நாள் கழித்து தமது சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் ஏற்றவாறு மாற்றிக் கொண்டார்கள். ஆனால் இயேசு, ஆன்மிகவளம் மிகுந்த பாலைவனச் சந்நியாசிகளின் நடைமுறைகளைப்பின் பற்றினார்.

இவ்விழாவிற்கு முக்கியமாக, ஒருவயது நிரம்பிய வெள்ளைச் செம்மறி ஆட்டைப் பலியிட வேண்டும். இதற்காக பேதுருவும், யாக்கோப்பும், யோவானும் ஜெருசலேம் ஆலயத்திற்கு ஆட்டைக் கொண்டு வருகிறார்கள். இங்கு சனக்கூட்டம் நிறைந்திருந்தது, வரிசையில் நின்ற சீடர்கள் தங்கள் முறை வந்ததும் ஆட்டை ஆசாரிகளிடம் கொடுத்தார்கள். ஆசாரிகளில் ஒருவர் ஆட்டின் கழுத்தை அறுக்க, மற்றவர் அதிலிருந்து பீரிட்ட இரத்தத்தைச் சேகரித்து, பீடத்தின் மேல் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் ஊற்றினார். அவ்வேளை, லேவியர் பாடல் குழு 136ம் திருப் பாடலை பாடிக்கொண்டிருக் கின்றது. சீடர்கள் மூவரும் ஆட்டின் உடலைச் சுமந்த வண்ணம் வீடு திரும்பினார்கள்.



இந்த வீடு, இயேசுவின் அன்பும் அபிமானமும் கொண்ட சீடன் யோவான் மாற்கு என்பவருக்கும் அவருடைய தாயாருக்கும் சொந்தமானது. இதைக் கலிலேயாவில் இருந்து வந்த இயசுவுக்கும் அவரைச் சாந்தவர்களுக்கும் பாஸ்கா விழாவைக் கொண்டாட கொடுத்திருந்தார்கள். அங்கே இயேசுவின் தாய் மரியாளோடு சீடர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் இருந்தார்கள். பிற்காலத்தில் அதாவது இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இதே வீட்டில் தான் தமது சீடர்களுக்குக் காட்சி அளித்தார்.(யோவா 20:19-24,29). அதே இரவு உணவுண்ட அறையில் தான் சீடர்கள தூய ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். (தி ருத் தூதர்பணி 2: 1-4) அந்த வீட்டைச் சீடர்கள் அடைந்ததும் ஆட்டைச் சமையல் செய்யும்படி பெண்களிடம் கொடுத்து விட்டு ஒலிவத் தோப்புக்கு வந்தார்கள்; அங்கே இயேசுவும் இருந்தார்.

ஒலிவத்தோப்புக்கும் இயேசுவிற்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. அவர் தனியாகவும் சீடர்களுடனும் அங்கே வருவதுண்டு. வானளா உயர்ந்த உறுதியான ஒலிவ மரங்கள் அடர்ந்த தோப்பு, அமைதியும் எழிலும் தங்குமிடம், கீழே கெதரோன் அருவி ஓடிக்கொண்டிருந்தது "இயேசு பகல் நேரங்களில் கோவிலில் கற்பித்து வந்தார். இரவு நேரங்களிலோ ஒலிவம் என்று வழங்கப்பட்ட மலைக்குச் சென்று தங்கி வந்தார்." என்று லூக்22:37இல் குறிப்பிடுகிறார். திரு விழாக்காலங்களில் ஜெருசலேம் நகரின் சனத் தொகை மூன்று மடங்காக அதிகரிக்கும் போது, வாடகை வீடுகளின் விலையும் அதிகரிக்கும். இந்நாட்களில் அயல் கிராமங்களில் இருந்து வரும் ஏழைகள் இங்கே தஞ்சம் புகுவார்கள். அந்த ஒலிவத் தோப்பில் இயேசுவும் சீடர்களும் பேசிக்கொண்டிருந்து விட்டு பாஸ்கா விழாவை அனுசரிக்க வீட்டுக்குத் திரும்பினார்கள்.

யூதமத வழக்கப்படி பாஸ்கா விருந்தை உண்ண ஆரம்பிக்கும் முன், "இந்த இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய இரவுகளை விட ஏன் வித்தியாச மானது?'' என்ற சடங்குக் கேள்வியை, இளை யவர் ஒருவர் கேட்க வேண்டும். இதை, அந்த வீட்டின் இளைய மகனான யோவான் மாற்கு கேட்கிறார். அதற்கு, பிரதான இருக்கையில் அமர்ந்திருந்த இயேசு, "பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது முன்னோர்கள் எகிப்தில் அடிமை களாக அல்லல் உற்றனர். அவர்களின் கூக் குரலைக் கேட்டு, யாவே இறைவன் நம் மக்களை ஒடுக்கியவர்களுக்கு எதிராக வலிமையான அதிசயச் செயல்களை செய்து, அடிமைத் தனத்தில் இருந்து விடுவித்து, நாம் வாழும் இந்த நாட்டுக்குக் கொண்டு வந்தார். அதையே இன்று கொண்டாடி, தந்தையாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்'' என்று பதிலளித்தார். அங்கே வறுத்துச் சமைக்கப்பட்ட செம்மறியின் இறைச்சியும், ரொட்டியும், பழச்சாறும், திராட் சை இரசமும், கசப்புக் கீரையும், உப்பு நீரும் இருந்தன. இயேசு, தமது முன்னோர்கள் எகிப் தில் வாழ்ந்த கசப்பான வாழ்வை நினைவு கூற கசப்புக் கீரையை உப்பு நீரில் தோய்த்து சாப் பிட்டார். அப்படிச் சாப்பிடுவது சம்பிரதாயமா கும். (விடுதலைப்பயணம் 12:8) அப்போது அவர் உள்ளம் கலங்கியவராக, "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்என்று திட்டவட்ட மாகக் கூறினார்." (யோவா13:21) அதைக் கேட் டதும் பந்தியில் ஒரு சலசலப்பு எழுந்தது. குழப்பமடைந்த அவர்கள், "யாரைப் பற்றி அவர் அப்படிக் கூறினார்." (யோவா12:22) என்று தமக்குள்ளே கேட்டுத் தடுமாறினார்கள். அப்போது சீடர்களில் ஒருவர், "ஆண்டவரே அவன் யார்?'' என்று கேட்க, இயேசு மறுமொழியாக, "நான் யாருக்கு அப்பத்துண்டை தோய்த்துக் கொடுக் கின்றேனோ அவன் தான்'' என்று சொல்லி அதை யூதாசிடம் கொடுத்து, நீ செய்ய விருப் பதை விரைந்து செய்'' என்றார். (யோவா13: 25-27) ஆனால் அவை அங்கிருந்த பலருக்கு விளங்கவில்லை, சிலர் குழப்பநிலையிலும், சிலர் பயந்த நிலையிலும் இருந்ததால் மொத்தத்தில் அதை யாருமே சரியாகப் புரிந்து கொள்ளவில் லை. பணப்பை யூதாசிடம் இருந்ததால் திருவிழா வுக்குத் தேவையானதை வாங்கவோ ஏழைக ளுக்குக் கொடுக்கவோ இயேசு அவனிடம் கூறியி ருக்கலாம் என்று சிலர் எண்ணிக் கொண்டனர். யூதாஸ் வெளியே போனான், அது இரவு நேரம், அதில் அவன சங்கமித்து விட்டான்.

அதன் பிறகு "இயேசு, அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, இதைப் பெற்றுக் கொள்ளுங்கள், இது எனது உடல் என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி கூறி அவர்களுக்குக் கொடுத்தார். இது எனது உடன் படிக்கையின் இரத்தம். இது பலருக்காகச் சிந்தப்படும்.'' என்றார். (மாற 14:22-24) எல்லோரும் உண்டு பருகினார்கள். இயேசு சீடர்களைப் "பிள்ளைகளே....'' என்று அழைத் தார். இந்த அழைப்பு அவர்களுக்குப் புதுமை யாக இருந்தாலும் இதமாக இருந்தது. ஆனாலும் அவர் தொடர்ந்து சொன்ன வார்த்தைகள்,".... இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன்'' என்றது அனைவரையும் திகைக்க வைத்தது. உள்ளுணர்வுகள் கிளர்ந்தெழ, பெண்கள் உட்பட அனைவரும் பனித்த கண்களோடு அவரை நோக்குகிறார்கள்; அவர் பேசிக் கொண்டிருந்தார். எல்லோர் மனதிலும் கவலை குடிகொண்டது, குறிப்பாக தாய் மரியாளின் மனத்தை வாளொன் று ஊடுருவியது போன்ற உணர்வு உண்டாயிற்று. அவர் இயேசுவின் முகத்தைக் கையில் ஏந்தி, "என் அன்பு மகனே, இறைவன் என்றும் உன்னோடு இருக்கிறார்." என்ற போது குரல் நடுங்கியது. சூடான இரண்டு கண்ணீர் முத்துக் கள் இயேசுவின் நெற்றியில் விழுந்தன. அந்த இரவில் இயேசு அர்ப்பணம் ஆனார்.

*(ஆதாரம், அருட்தந்தை P. ஜோசப் எழுதிய "புனித நாட்டு பயணம், றெக்ஸ் ஜோசப் அவர்கள் எழுதிய, "தெய்வம் புழுதியிலே'', என்பவை)*

## புற்று நோயை விரட்டும் உணவுகள்

கேன்சர் என்ற வார்த்தை கார்சி னோமா என்ற சொல்லிலிருந்து உருவா னது இதன் பொருள் நண்டு என்பது தான்.

பீட்ரூட் ஜூஸ் புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது. முட்டைக் கோஸ், கரட், எலுமிச்சை, தோடம்பழம் போன்றவை நல்லது. வெங்காயம், பூண்டு கேன்சருக்கு எதிரி, தக்காளி, நெல்லி, போன்றவையும் புற்று நோய் வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்சு நாட்டில் வாழ்ந்த ஓர் இளைஞன ஒரு புதிய சமயத்தை நிறுவ விரும்பி, அதைக் குறித்து ஒரு பெரியவரிடம் ஆலோசனை கேட்ட போது, அப்பெரியவர் அந்த இளைஞனிடம், "நீ நிறுவவிருக்கும் புதிய சமயம் நீ இறந்த பிறகும் நிலைத்திருக்க வேண்டுமென்றால், ந் ஒரு வெள்ளிக்கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டுச் சாக வேண்டும். மறுநாள் சனிக்கிழமை கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் ஞாயிற்றுக் கிழமை உயிர்த்தெழ வேண்டும்" என்றார். அப் பெரியவர் சொன்னதில் பொதிந்திருந்த உண்மையை உணர்ந்த அந்த இளைஞன் தனது எண்ணததைக் கைவிட்டுவிட்டான்.

கிறிஸ்துவ சமயம் கடந்த இருபது நூற்றாண்டுகள் எத்தனையோ சவால்களையும் வேத கலாபனைகளையும் கடந்து வந்து, இன்றும் உயிர் துடிப்புடன் இருப்பதற்குக் காரணம் அது கிறிஸ்துவின் உயிர்ப்பை அடித்தளமாக் கொண்டுள்ளது. நற்செய்தியானது கிறிஸ்துவின் உயிர்ப்பை விளக்குகின்றது என்பதை விட, கிறிஸ்துவின் உயிர்ப்பு தான் நற்செய்திக்கே விளக்கமளிக்கின்றது. ஏனெனில் புனித பவுல் சுட்டிக் காட்டியுள்ளது போல, கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் நற்செய்தியும் பயனற்றது: நமது நம்பிக்கையும் பயனற்றது. *(1கொரி 15:14).*

# உயிர்ப்பில் மலரும் புதுவாழ்வு

கிறிஸ்து தமது அதிகாரத்திற்கும் போதனைக்கும் தமது உயிர்த்தெழுதலைத்தான் சான்றாக முன் வைத்தார். "இக்கோவிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதை கட்டி எழுப்புவேன்". *(யோவா 2:19).* அவர் குறிப்பிட்ட கோவில் அவர் உடல் என்பதை அவரின் சீடர்கள் அவர் உயிர்த்த பின் நினைவு கூர்ந்து, அவரில் நம்பிக்கை கொண்டனர். *(யோவா 2:21-22).*

திருத்தூதர்களுடைய போதனையின் மையக் கருவாக விளங்கியது கிறிஸ்துவின் உயிர்ப்பாகும். "வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்" *(திப. 3:15-16)*

கடைக்குச் சென்ற ஒருவர், அக்கடையிலிருந்த காலியான டின்னிலிருந்து 1/2 கிலோ கொடுக்கும்படி கடைக்காரரிடம் கேட்டபோது, கடைககாரர் அவரது அறியாமையை எண்ணி விழுந்து விழுந்து சிரித்தார். காலியான டின்னிலிருந்து எதையாவது எடுக்க முடியுமா? சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!

ஆனால், காலியாகக் கிடந்த இயேசுவின் கல்லறை இயேசுவின் உயிர்ப்பை எடுத்துரைத்தது. அதிகாலையில் இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள் காலியாகக் கிடந்த கல்லறையைக் கண்டனர். வானதூதர் அவர்களுக்குக் கொடுத்த விளக்கம்: *"சிலுவையில் அறையப்பட்ட நசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை" (மாற் 16:6)*

பேதுருவுடன் இயேசுவின் கல்லறைக்குச் சென்ற அன்புச் சீடர் யோவான், கல்லறைக்குள் "சென்றார், கண்டார், நம்பினார்" (யோவா20:8) அவர் கண்டதோ காலியான கல்லறை; ஆனால் அவர் நம்பியதோ உயிர்த்த இயேசுவை, எனவே காலியான கல்லறையே இயேசுவின் உயிர்ப்புக்குச் சாட்சியம் பகிர்ந்தது.

யேசுவின் உயிர்ப்பு நமது உயிர்ப்புக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. இறந்தவர்கள் உயிர்க்கவில்லையென்றால் இயேசுவும் உயிர்க்கவில்லை *(1கொரி 15:13).* கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வர் (யோவா 11:25) கிறிஸ்துவின் திருவுடலை உண்டு அவரது இரத்தத்தைப் பருகுவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர் *(யோவா6:54)* அவர்கள் ஏற்கனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள். *(யோவா5: 24)*

ஒருவர் குளவியால் கொட்டப்பட்டு இறந்து விட்டார். அவரைக் கொட்டிய அதே குளவி அவரது மகனை ஒரு வாரம் கழித்து கொட்ட வந்தபோது, அவன் அலறிக்கொண்டு அவன் அம்மாவைக் கட்டிப்பிடித்தான். அவன் அம்மா அவனிடம், "நீ பயபடாதே! இக்குளவி உன் அப்பாவைக் கொட்டிய போது அது தன் கொடுக்கை இழந்துவிட்டது. இனிமேல் அதனால் உன்னை ஒன்றும் செய்யமுடியாது" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், இயேசு இறந்தபோது அவர் தமது சாவினால் சாவின் கொடுக்கை முறித்து விட்டார். சாவு தனது கொடுக்கை இழந்து விட்டது. " சாவு முற்றிலும் ஒழிந்தது ; வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி 15: 54-55)

நாம் திருமுழுக்குப் பெற்றபோது இயேசு வின் சாவிலும் உயிர்ப்பிலும் பங்கு பெற்றுள்ளோம். அவரோடு நாம் இறந்து விட்டோம் என்றால், அவரோடு உயிர்ப்பது நிச்சயமாகி விட்டது (உரோ 6: 3-11)

கிறிஸ்துவின் உயிர்ப்பு நமது வாழ்வுக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுக்கிறது. கிறிஸ்து வின் கல்லறைக்குச் சென்ற பெண்கள் கல்லறை வாயிலை மூடியிருந்த பெரிய கல்லை எவ்வாறு அகற்றுவதென்ற கவலையுடன் சென்றனர். ஆனால் அக்கல்லானது ஏற்கனவே புரட்டப்பட்டிருந்தது. (மாற் 16: 3-4) அவ்வாறே நமது வாழ்விலும் வரும் பெரிய இடர்களையும் உயிர்த்தயேசு அகற்றி விடுவார். நாம் அஞ்சத் தேவையில்லை. மலைகள் போலத் தடைகள் வந்தாலும் நாம் மலைத்திடாது நமது வாழ்வுப் பயணத்தைத் தொடர்வோம். ஏனெனில் உயிர்த்த ஆண்டவர் உலகம் முடியும் வரை எந்நாளும் நம்மோடு இருக்கிறார் ( மத் 28: 20) நாம் உயிர்ப்பின் மக்கள்; நம் கீதம் அல்லேலூயா!

பெரிய கொடிமரத்தில் ஏறிய ஒருவர் கீழே இறங்கியபோது மிகவும் பயந்தார். கீழே இருந்த வர்கள் அவரிடம், கீழே பார்க்காமல் மேலே வானத் தைப் பார்த்துக் கொண்டே இறங்கும் படி கேட்டனர். அவரும் மண்ணைப் பார்க்காமல் விண் ணைப் பார்த்த வண்ணம் கீழே இறங்கினார். நாமும் நம்மையும் நமது பிரச்சனைகளையும் மட்டும் பார்த்தால் நமது தலை சுற்றும்; மயக்கமும் தயக் கமும் வரும். எனவே நாம் மேலுலகைப் பார்த்த வண்ணம் வாழ வேண்டும். ஏனெனில், அங்குதான் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கம் அமர்ந்துள்ளார். (கொலோ 3: 1-3)

பாஸ்காத் திருவிழிப்பில் நாம் காண்பது புதிய நெருப்பு, புதிய ஒளி, புதிய தண்ணீர், புதுப் படைப்பு, புதுவாழ்வு, பழையன கழிந்து, புதியன புகுந்தன. இவை யாவும் கடவுளின் செயலே ( 2கொரி 5: 17-18)

"ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ் வோம்" (திபா 118: 24)

## ஒரு கதவு மூடும் போது இன்னொரு கதவு திறக்கிறது.

'இருண்ட தினத்தை மறுநாள் வரை வாழ்ந்து விட் டால் அந்த நாள் தானாகவே கழிந்து போகும் என்று வில்லியம் கூப்பர் பல ஆண்டுகளுக்கு முன் எழுதினார்.

இது அன்றும் உண்மை, இன்றும் உண்மை, என்றும் உண்மை. நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் இருண்ட நாட்கள் உண்டு. ஒவ்வொரு இருண்ட நாளும் கழியத்தான் போகிறது. அழுத்தமான சோகங்களை நம்மீது திணிக்கின்ற வாழ்க்கை, மென்மையான அன்பினால் அந்தச் சோகத்தையும் துடைக்கவே செய்கிறது, இருண்ட நாள் கழிந்து புதிய நாள் உதயமாகிறது.

நம்முடைய இருண்ட நாட்கள் கடந்து போய், அதன் சோகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறதிக்குள் புதையட்டும். ஒவ்வொரு நாளும், கடந்த கால இருளைப் புதுப்பித்துக் கொண்டே இருக்காதீர்கள். இறந்து போன கடந்த காலம் இறந்ததைப் புதைக்கட்டும். உலகத்தில் எதுவுமே எப்போதும் நீடிப்பதில்லை. தொல்லைகள் கூட நாமாகப் புதுப்பிக்காவிட்டால் சிறிது காலமே இருந்து மறைந்து விடுகிறது. துயரம், சோகம், பயம், கஷ்டம் போன்றவற்றை அவை விலக்கக் கூடியவை என்ற உணர்வில் நீங்கள் தாராளமாக எதிர்நோக்கலாம். தவிர்க்க முடியாத ஒன்று எதிர்ப்படும் போது அதை அப்படியே ஏற்கச் சித்தமாக இருங்கள். ஏனெனில் அது குறித்து நீங்கள் செய்வதற்கு எதுவும் இல்லை. ஆகவே அதையே பிடித்துத் தொங்கிக் கொண்டு இருக்காதீர்கள். மூழ்கும் கப்பலின் மேல் தளத்தைக் கழுவி சுத்தப்படுத்திக் கொண்டிருப்பது வீண் வேலை. அது மூழ்கத்தான் வேண்டுமென்றால் மூழ்கத்தான் போகிறது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் மூழ்கும் கப்பலை விட்டுவிட்டு அடுத்த பயணக் கப்பலைத் தேடுவது தான் ~

டாக்டர். எம். ஆர்.காப்மேயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தவருக்கு நாம் சாட்சி

பாரினை ‘அன்பாலே ஆளவந்த
பரன்ஏசு மீதுபாரச் சிலுவை வைத்து
காறித்துப்பி கைகளில் ஆணியடித்து
தனிவில்லார் சிலுவையிலே அறைந்து கொன்றார்
சூரியனைக் கைகளினால் மூடும் போக்காய்
சுதன்ஏசு தனைக் குழியில் அடக்கிவிட்டார்
நீரில்மூழ்கிக் குளிப்பவன் பின் எழுவது போல்
நேயமகன் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

கல்லறையைக் காவல்காத்த சேவ கரும்
கர்த்தரவர் உயிர்பெறலைக் கண்டு விட்டார்
சொல்லிவிட முடியாத வியப்பில் அந்நோர்
சுற்றித்தரை மீதினிலே மயங்கி வீழ்ந்தார்.
மெல்ல அவர் கண்விழித்துப் பார்த்த போது
மேலெழுந்து வான்நோக்கி செல்லு கின்றார்
நல்லவர்கள் நெஞ்சினிலே நாளும் பொழுதும்
நம்மீட்பர் உயிர்ஹெற்று வாழுகின்றார்.

காலையிலே கல்லறைக்கு வந்த மூன்று
கன்னியர்கள் கல்லறை தான் திறந்திருக்க
பேழையிலே கொண்டுவந்த வாசனையை
பக்கத்தில் வைத்துவிட்டு பதைப் பதைத்தார்
சோலைமலர் போல வந்த வானதூதர்
தேவனையா தேடுகிறீர்? உயிர்த்தவர் சென்றார்
ஆலைச்சங் கோசையென அதனைக் கூற
அப்போதே சீடரிடம் அவர் விரைந்தார்

ஆலயத்தை இடித்திடுங்கள் மூன்றாம் நாளில்
அப்படியே கட்டிடுவேன் என்றார் இயேசு
சீலமற்ற செருக்குமனம் படைத்த யூதர்



சிறப்புமிகு சொற்கருத்தை உணரவில்லை
ஞாலத்திலே இறைவனுக்கு எமது முன்னோர்
காலமெல்லாம் கட்டியதை மறுநாளினிலே
மீளக்கட்டு வானோ இவன்? வசைமொழிந்தார்,
மூன்றாம் நாள் உயிர்ப்பேனென்ற பொருளறியார்

உயிர்த்தபின்பு எம்மாவுஸ் நகர்க்குச் சென்றார்
உடன்வந்த தோழரோடு பந்தி யமர்ந்தார்
உயிர்த்த இயேசு சீடருக்குக் காட்சி தந்தார்
உங்களுக்குச் சமாதானம் என மொழிந்தார்
மோயீசன் சட்டமுதல் இறையு ரையில்
எனக்குண்டு சாட்சியென: காயங் காட்ட
உயிர்பெற்ற ஆண்டவரில் உவகைகொண்டார்
உவப்போடு திருமகனின் சாட்சியானார்

**தமிழ்ச் செல்வன் மாசிலாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தீர்வின் எதிர்காலம்?!

இலங்கை அரசியல் பீடத் தலைமைத்துவம் எடுத்த அதிரடி நடவடிக்கையால் திடீரென இடம்பெற்ற தேர்தல் எதிர்பாராத சில திருப்பங்களுடனும், அதே வேளை எதிர்பார்த்தவாறு எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காதவாறும், உலக நாடுகள் பாராட்டும்படி அமைதியாகவும் நடந்து முடிந்துவிட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எடுத்த சமாதான முயற்சிகளைக் கடுமையாக விமர்சித்து வந்த, மக்கள் ஐக்கிய முன்னணியிடம் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இடைப்பிரச்சினை தொடர்பான கடுமையான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளதோடு தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் சமஷ்டி ஆட்சி முறைக்கும் இடைக்கால நிர்வாக யோசனைக்கும் முற்றிலும் விரோதமான கருத்துக்களையே தெரிவித்து வந்துள்ளது.

அதேவேளை பௌத்த சிங்கள மத அடிப்படைவாதக் கட்சியான ஹெல உறுமய 9 ஆசனங்களைப் பெற்று நான்காவது பெரிய கட்சியாக பாராளுமன்றத்துக்குள் நுழைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள், புலிகளின் தலைமையில் இடம் பெறுகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், சுய நிர்ணய உரிமையுள்ள சமஷ்டி ஆட்சிக்கும் ஆதரவு தெரிவித்து அதிகளவில் வாக்களித்த அதே வேளை, இக் கொள்கைக்கு எதிரான போக்குடைய சிங்கள கட்சிகளின் கைகளுக்கு ஆட்சிப் பொறுப்பை தென்னிலங்கை மக்கள் தந்துள்ளனர். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய பெரும்பான்மை இனத்தவரின் இந்த மனப்போக்குகள் உட்சாகம் தருவதாக இல்லை. சண்டையில்லாத சமாதானம் ஒன்றை விரும்பும் தென்னிலங்கை மக்கள் நீதியான ஓர் அரசியல் தீர்வுக்கு உடன்பாடில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல் இடைக்கால நிர்வாகசபை வரைபுகள் வரை வளர்ந்துள்ள சமாதான முயற்சிகளின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகிறதோ என்று சமாதான விரும்பிகள் அங்கலாய்க்கின்றனர். "நீதியன்றிச் சமாதானமில்லை" என்னும் உண்மையை ஏற்றுக்கொள்ள இந்த நாடு இன்னும் எவ்வளவு விலை கொடுக்கவேண்டுமோ!!

– மலர்வேந்தன் –

# இயலாமை வெட்கத்துக்குரியது அல்ல!

ஆபிரகாம் லிங்கனின் தந்தை ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி. ஆனால் தமது உழைப்பாலும் முயற்சியாலும் அமெரிக்க ஜனாதிபதியானார் லிங்கன். அவரை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் அமெரிக் கப்பாராளுமன்றத்தில் ஒருவர் பேசினார். "மிஸ்டர் லிங்கன்! உங்களை பல பேர் இங்கே பாராட்டிப் பேசினார்கள் அது குறித்து நீங்கள் மகிழ்ந்து விட வேண்டாம். உங்கள் பழைமை, வறுமை குறித்து நான் நினைவூட்ட வேண்டும். உங்கள் அப்பா தைத்துக் கொடுத்த 'ஷூ' இன்னும் என் காலில் இருக்கிறது ஞாபகமிருக்கட்டும்" என்று லிங்கனின் தந்தை செருப்புத் தைப்பவர் என்பதை சுட்டிக் காட்டினார் அவர்.

ஆபிரகாம் லிங்கனோ பதட்டப்படாமல் "நண்பரே! என் தந்தை மறைந்து பல காலமாகிறது. ஆனால் அவர் தைத்துக் கொடுத்த காலணி இன்னும் உங்களிடம் உழைக்கின்றது என்றால் என்ன பொருள்? அவர் எவ்வளவு சிறந்த உழைப்பாளி என்பது தெரிகிறது அல்லவா? அப்படி ஒரு சிறந்த தொழிலாளியின் மகனாகப் பிறந்தது குறித்து நான் பெருமையடைகின்றேன். அதுமட்டுமல்ல இப்போது உம் செருப்பு கிழிந்து போனாலும் என்னிடம் கொடுங்கள். நான் அதை ச் சரி செய்து தைத்துத் தருவேன். அந்தத் தொழிலையும் நான் நன்கு அறிவேன். எனக்கு செருப்புத் தைக்கவும் தெரியும், நாடாளவும் தெரியும்" என்று ஒரு போடு போட்டார்.

*இயலாமையோ வறுமையோ, வெட்கத்துக் குரியது அன்று. தாழ்வுமனப்பான்மை தவறானது. தாழ்வு மனப்பான்மையை தூரம் தள்ளினால் வெற்றி நிச்சயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தியமான முயற்சிகளே நித்திய இன்பம் தரும் வெற்றிகளாகும்.

R. ஸ்ரான்லி பிரபாகரன்

உலகில் எதையாவது சாதித்து விட நாம், சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம். எமது அன்றாட வாழ்வைத் திருப்திகர மாக அமைக்க தினமும் போராடுகின்றோம். "இந்த முயற்சிகளும், தேடல்களும் எமக்கு வெற்றியைத் தந்துவிட்டனவா" என்பதற்கு விடையை எமது அனுபவங்களே தெரிவித்து நிற்கும். எமது பல முயற்சிகள் வெறுமையைத் தந்திருக்கின்றன. வெறுமையே கண்டு சலித்துப் போன இந்தச் சமூகத்துக்கு உயிர் த்த யேசுவின் வெற்றி வளமையையும், நிறைவையும் உண்டாக்கும். எமது வாழ்க்கைச் சக்கரம், இன்று முடிந்தால் நாளை: நாளை முடிந்தால் மறுநாள் என தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டே இருக்கின்றது. இவ்வாறாக கடந்து போன நாட்களைப் பற்றியும், அவற்றில் நாம் எய்து விட்ட பலாபலன்கள் பற்றியும் சிந்தித் தோமானால், எங்கும் வெறுமை! ஓடி ஓடி ஆர்வத்தோடு தீட்டிய பல திட்டங்களும் வெறுமையாயின. வளமையையும், நிறைவையும் நாடி நாடிச் சென்றாலும் கூட அனைத்தும் கானல் நீரே.

அவ்வாறாயின் வெறிச்சோடிப் போன எமது வாழ்வும், மனிதனின் திட்டங்களும் அர்த்தம் அற்றவை தானா? மனிதனின் சிந்தனைக்கும், ஆற்றலுக்கும் இதுதானா முடிவு? இல்லவே இல்லை. இதற்கு விடை தரும் முன்மாதிரி இயேசுவே. அவரது வெற்றியே எம்மைச் சரியான சாதனைகளையும், நிரந்தரமான மகிழ்வையும் அடைய உதவும் முன்னுதாரணம்.

எமது வாழ்வில் ஏற்படும் விரக்தி நிலைகள் நிலையானவை அல்ல. அத்தோடு நமது திட் டங்களின் தன்மையைப் பொறுத்ததே. உலகின் பல பெரியார்களும், அறிஞர்களும், விஞ்ஞானிகளும் படிப்படியாகப் பல தோல்விகளை அனுபவித்தாலும் அதனால் கிடைத்த விரக்தியோ, மனச்சோர்வோ அவர்களுக்கு இறுதியாகக் கிடைத்த சம்பாவனை என்றாகிவிடவில்லை. மாறாக தான் தீட்டிய திட்டம் பயன் கொடுத்து , இவ்வுலக மாந்தர் அவற்றால் நன்மை பெறுகின்ற போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் தான் அவர்களுக்குக் கிடைத்த சமபாவனை. எனவே மனத்தூய்மையோடு செய்கின்ற எக்காரியமும், இடையில் பல மனச் சிக்கல்களைத் தந்தாலும், இறுதியாக விளைவிப்பது மகிழ்ச்சியே. இயேசுவும் உயரியதொரு திட்டத்தை முன்னிருத்தியே செயற்பட்டார். இறுதியாக அவர் பெற்றது வெற்றியும், மகிமையுமே ஆகும்.

அன்றாட வாழக்கையில் நாம் எவ்வளவுதான் முயற்சிகள் செய்தாலும் தோற்றுப் போகின்றோம். எதிர்பாராத அனர்த்தங்களும், இழப்புக்களும் எம்மை சீர்குலைக்கின்றன. அன்புடனும், ஆதரவுடனும் பழகிய பலரின் உறவுகள் துண்டிக்கப்படுகின்றன. உள்ளம் வேதனை அடைகின்றது. உறவுகளே இல்லை என்ற வெறுமை நிலை எம் உள்ளத்தை ஆட்கொள்கின்றது. உலகில் தனியே விடப்பட்டுவிட்டோம் என்ற பீதி எம்மைக் கௌவிக் கொள்கின்றது. இத்தகைய நிலைகளில் தான் இயேசுவின் உயிர்ப்பும், வெற்றியும் எமக்கு முன்மாதிரிகையாக அமைகின்றது.

இத்தகைய அனுபவங்கள் "எல்லாம் வீணிலும் வீண்" என்ற மனநிலையை எம் உள்ளத்தில் தோற்றுவிக்கிறது. இப்படிச் சொல்கின்ற போது "வாழ்க்கை நிறைவானது, அர்த்தம் உடையது" என்ற



கொள்கையையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இந்த இரண்டு விடயங்களில் முரண்பட்ட நிலை என்ன என நாம் சிந்திக்க வேண்டும். உண்மையில் இக் கருத்துக்கள் இரண்டும் முரண்பட்டவை என்று கூறுவதை விட இவை வெவ்வேறு அர்த்தம் உடையன என்றே கூற வேண்டும். வாழ்வின் இன்பங்கள் வீண்; வாழ்க்கை நீர்க்குமிழ் போன்றது என ஒரு சாராரும், உலகின் இன்பத்தை அனுபவிக்கவே மனிதன் பிறந்திருக்கின்றான் என இன்னுமொரு சாராரும் கூறிக்கொள்கின்றார்கள். இந்த இரண்டு சாராரினது கருத்துக்களின் உண்மை நிலை என்ன, இவை இரண்டில் எது சரியானவை, இந்த இரண்டு சாராரினதும் உலகு பற்றிய நோக்குகள் என்ன? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அப்போது தான் உண்மையான வெற்றி எது தோல்விகளின் அர்த்தம் என்ன என்பவற்றைக் கண்டறிந்து அதனை நோக்கி எமது செயற்பாடுகள், முயற்சிகளை அமைத்துக் கொள்ள முடியும். நம்மில் பலர் இரண்டு கருத்துக்களையுமே சீர்தூக்கிப் பார்க்க மறுத்து விடுகின்றோம். ஒரு கருத்தின் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்து இருப்பதனால் தனி மனிதர், குடும்பங்கள், ஏன் உலகளாவிய ரீதியில் நடைபெறுகின்ற உறவாடல்களிலும், உரையாடல்களிலும் முரண்பாடுகளும் முடிவு பெறாத விவாதங்களும் இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இந்த முரண்பாட்டு நிலையை உலகில் லௌகீகவாதிகளுக்கும், சமயவாதிகளுக்கும், இடையே காணலாம். இறை நம்பிக்கையும், தேவபயமும் உடையவர்கள் இவ்வுலகினால் கிடைக்கும் இகழ்ச்சிகளையும், தோல்விகளையும் கண்டு மனம் சலிக்கமாட்டார்கள். அவர்கள் வெற்றி என்றும், மகிழ்ச்சி என்றும் கருதுவது பிரத்தியேகமானவையாகும். ஆனால், லௌகீக விரும்பிகளோ தற்காலிகமான இன்பங்களையே இலக்காக வைத்துச் செயற்படுகின்றார்கள். அத்தோடு, தற்காலிகமான தோல்விகளுக்கும், சவால்களுக்கும் பயந்து அவற்றை மேவிவிட வேண்டும் என்பதற்காக தற்காலிக இன்பங்களையே தேடுகின்றனர். அவை தற்காலிகமானவை; ஆதலால் விரைவில் மறைந்து விடுகின்றன. அதனை அனுபவித்தவர்களும் கற்பாறையில் முளைத்த பயிர் போல வாடிவதங்கி விரக்தி அடைகின்றார்கள்.

இறைவன் எமக்குக் கொடுத்த இந்த வாழ்வினை இன்பமானதாக மாற்ற நாம் பெரிய சாதனைகளைச் செய்ய வேண்டும் என்றில்லை. சில சாதாரண திட்டமிடல்களில் கூட நாம் கவனமாக இருந்தால் வெற்றியை அடையலாம். நாம் நமது வாழ்வை வளமுற அமைக்க பல விடயங்களைக் குறித்துக் கவனம் செலுத்துகின்றோம். ஆனால், கவனம் செலுத்த வேண்டியவற்றில் கவனம் செலுத்தாமல் விட்டால், அவை விஷ்வரூபம் எடுத்து எம்மையே விழுங்கி விடுவதும், எம் அமைதியைக் குழப்பி விடுவதுமான பெரும் பிரச்சினையாக மாறி விடும்.

உதாரணமாகக் குடும்பத்தில் தந்தை ஒருவர் தனது நாட்களில் ஒவ்வொரு நாளும் அதிக நேரத்தை பொருள் ஈட்டுவதிலேயே செலவிடுகின்றார் என வைத்துக் கொள்வோம். அவர் வீட்டில் தன் மனைவியுடனும் வளரும் தனது பிள்ளைகளுடனும் கலந்துரையாடுதிலோ அவர்களுடனான அன்புறவை வளர்ப் பதிலோ காலத்தைச் செலவிட வில்லை. சமூகத்தில் மதிப்புடனும், நிம்மதியாகவும், வாழ பொருளே தேவை என்னும் கொள்கையுடன் செயற்படுகின்றார். பிள்ளைகள் வளர்கின்றார்கள், தந்தையின் நேரடிக் கண்காணிப்பு இல்லாததினால் சமூகத் துரோகக் காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். சில ஆண்டுகளின் பின் தந்தை சமூகத்தின் முன் தலைகுனிகின்றார். பல விதமான நெருக்கடிகளுக்கும், மன வேதனைகளுக்கும் உள்ளாகுகின்றார். குறிப்பிட்ட காலம் வரைதான் அவர் நிம்மதியை அனுபவித்தார். அது இப்போது அழிந்து விட்டது. இந்த உதாரணத்தில், பிள்ளைச் செல்வம் தான் உண்மையான செல்வம் என்பதைத் தந்தை உணர மறுத்துவிட்டார். அதன் இறுதி விளைவு தோல்வி, வெறுமை, மனச் சோர்வு என்பனவே ஆகும்.

நிலைக்கும் இன்பத்தை வெற்றியாகப் பெற்றுக் கொள்ள உலகில் என்ன சாத்தியப்பாடு இருக்கின்றது. இந்த சாத்தியப்பாடுகளை மனித கண்கொண்டு பார்த்து நாம் இணங்காண முடியாது. இறையருளோடு கூடிய ஞானக்கண் கொண்டு தான் நாம் பார்க்க வேண்டும். இதற்கு உதவியாக இயேசு எம்மைப் போன்று மனிதனாக வாழ்ந்து முன்மாதிரி காட்டியுள்ளார். அவர் மனித நேயத்தையே முக்கியமாகக் கொண்டார். தந்தையாம் இறைவனின் சித்தத்தை நிறை வேற்றுவதே தனது முக்கிய திட்டம் எனக் கொண்டார். சமூக அநீதர்களால் வந்த இடர்ப்பாடுகளைத் தற்காலிகமானதாகக் கொண்டு, அவர்களை மன்னித் து ஏற்றுக் கொண்டார். இறுதியில் உயிர்பெற்றெழுந்து உலகோர் வணங்கும் தெய்வமாய்த் திகழ்கின்றார். இந்த முன் மாதிரியையே எமது வெற்றியின் சாத்தியமான இலக்காக அமைத்து இயேசுவின் உயிர்ப்புடன் பங்கு கொள்ளுவோம்.



## தெரிந்து கொள்வோம்

பின்லாந்து நாட்டில் குழாய்கள் மூலம் வெந்நீர் விநியோகிக்கப் படுகிறது. ஒரு சில பகுதிக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்து பகுதிகளுக்குமே அரசே விநியோகிக்கின்றது.

உலகில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் முதலில் பிறந்த குழந்தை தான் மூத்ததாகக் கருதப்படுகின்றது. ஆனால் ஜப்பானில் இரண்டாவதாகப் பிறந்த குழந்தைதான் மூத்ததாம்.

சுவிஸ் பள்ளத்தாக்கின் தெற்குப் பகுதியில் யாரும் வீடு கட்டுவதில்லை. காரணம் இங்கு சூரிய ஒளி கிடையாது.

உலகிலேயே மிக் அதிகமாக மதுபானம் அருந்துகின்றவர்கள் தென் கொரிய மக்கள் தான் என்று ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

நோர்வே நாட்டில் ஸ்பிட்ஸ்பெர்கன் என்ற ஊரில் ஆண்டு தோறும் மூன்றரை மாத காலமும் இருபத்தி நான்கு மணிநேரமும் வெயில் விடாமல் காய்ந்து கொண்டே இருக்கும்.

பாட்டுப்பாடுவதன் மூலம் கண்ணாடியை உடைத்து விட முடியும் என்று கூறி அவுஸ்திரேலியா தலைநகரான சிட்னியில் ஒரு பெண் பாட்டுப் பாடிக் கண்ணாடியை உடைத்துச் சாதனை செய்துள்ளார்.

வளைகுடா நாடுகளில் முஸ்லிம் அல்லாத ஒருவர் இறந்து போனால் அங்கு இறந்தவர் உடலை புதைப்பதற்கு அனுமதி கிடையாது. அவர் எந்த நாட்டவரோ அங்கு தான் அவர் உடலை கொண்டு போக வேண்டும்.

*அ. ஷிரோமி லக்சாந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் 28 விடைகள்

*நான், இன்னும், எகிப்து, பார், செய்து, இவ்வாறு, அவனை, உன், இஸ்ராயல், ஒன்று,*

## அறிவை வளர்ப்போம் 28 விடைகள்

1) 32 *கி. மீ.* 2) *டோக்கியோ* 3) *காளிதாசன்* 4) *சங்கராபரணம்* 5) *வீரமாமுனிவர்*
6) *தவத்திரு தனிநாயகம் அடிகள்*

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடை அளித்து ரூபா 100/ பெறுமதியான பரிசினைப் பெறும் அதிர்ஷ்ட சாலிகள்**

1) **அ. ஞா. வேர்ஜினியா விநோதினி**
41. பழைய பூங்கா வீதி
அருள் யோ றோஸ் வாசா
யாழ்ப்பாணம்

2) **A. கிறிஸ்ரின் அர்ச்சனா**
சின்னக்கடை
மன்னார்.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து ரூபா 50/ பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்.**

1) **குழந்தை வடிவேல் டிலக் ஷனா**
உமாமில் வீதி
கொம்மாதுறை
செங்கலடி.

2) **அ. ஸ்ரெலாபாரதி**
இனிக்கோ
புதுமுகத்துவார வீதி
கல்லடி
மட்டக்களப்பு.

## பாராட்டுப் பெறுவோர்

1) **றொபின் றாகல்**
பிரதான வீதி
வாழைச்சேனை.

1. **கிளேயோப்பஸ் சிரோன்மணி**
மே/பா திருமதி மரியபுஸ்பம்
ரதெல்ல கீழ்ப்பிரிவு
நானுஓயா.

**பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டன் வாசகர்கள், எழுத்தளர்கள்,

விற்பனையாளர்கள், அனைவருக்கும்

ஆண்டவர் இயேசுவின்



# உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்!

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசங் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவா:- 11:25)

## 75ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 25 * 07 * 1919



இறப்பு 29 * 12 * 2003

**அமரர். கிறிஸ்ரி பெலிஷியர் எட்வட்**

## 40ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 09 * 03 * 1948



இறப்பு 02 * 02 * 2004

**அமரர். அன்டனி கிறிஸ்றோபர்**

மண்ணில் வாழ்ந்த நாட்கள் போதுமென்ற
இறைவனின் எண்ணத்தால்
விண்ணக வாழ்வினை அடைந்தீர்களே,
கண்ணீரின் வேதனையுடன்
கல்லறையில் உங்களை அடைத்தாலும்
நினைவலைகளில் உங்களுடன் - நிலைத்திருப் போம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org